Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மங்கள நிகழ்வுகளுக்கு மங்களகரமான ஸ்தாபனம்

முற்றிலும் நவீனமயப்படுத்தி, குளிரூட்டப்பட்ட காட்சியறை




குமரகுருபுடவை ஜவுளியகம்

யாழ்சாலை, கிளிநொச்சி.

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
2005
PERIODICALS DIVISION

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஐப்பசி- 24 ஹிஜ்ரி 1428 ஷவ்வால் 07 (10.11.2005) வியாழக்கிழமை இதழ் 41

## ஜயந்த தனபால பதவி விலகினார்!



கொழும்பு —

இலங்கை அரசாங்கத்தின் சமாதானச் செயலகப் பணிப்பாளராகக் கடமையாற்றிய ஜயந்த தனபால பதவியிலிருந்து விலகியுள்ளார்.

இவரது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி சந்திரிகா ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.


ஜயந்த தனபாலவின் பதவி விலகலை சமாதான செயலகப் பேச்சாளர் சார்மினி சேரசிங்கவும் உறுதிப்படுத்தினார்.

எதிர்வரும் தேர்தலில் வெற்றிபெறும் ஜனாதிபதி அடுத்த சமாதானச் செயலகப் பணிப்பாளரை நியமிப்பதற்கு வசதியாகவே ஜயந்த தனபால பதவி விலகியதாகக் கூறப்படுகிறது.

ஜயந்த தனபால விலகியுள்ள நிலையில் அவரது பணியிடத்துக்கு பொருத்தமான எவரையும் அரசு இதுவரை (12 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படை, விமானப்படையை நவீனமயப்படுத்த ரணில் திட்டம்!

## படையினர் மத்தியில் உறுதியளித்தார்



கொழும்பு —

தான் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதும் - முப்படைகளையும் பலப்படுத்த இருப்பதாகவும், குறிப்பாக கடற்படை மற்றும் விமானப்படையை பெருமெடுப்பில் முழுமையாக நவீனமயப்படுத்தப்போவதாகவும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க படையினருக்கு உறுதியளித்துள்ளார்.

கொழும்பில் முன்னாள் படையின, ஊன முற்றபடையினர், ஓய்வுபெற்ற படை அதிகாரிகள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு உறுதிவழங்கியுள்ளார்.

அங்கு பேசிய ரணில் விக்கிரமசிங்க-

பிரித்தானியாவைப் பொறுத்தவரை புலனாய்வு அதிகாரிகள் ஓரிருவருடங்களே பணியாற்றுவர். பின்னர் அவர்கள் வேறு துறைக்கு மாற்றப்பட்டுவிடுவர்.

இவர்கள் நீண்டகாலமாகப் பணியாற்றும் போது சுலபமாக இனங்காணப்பட்டு இலக்கு வைக்கப்படுவர் என்பதாலேயே இவ்வாறு செய்யப்படுகிறது.

அனால், இலங்கையில் புலனாய்வு அதிகாரிகள் ஆயுள்முழுவதும் பணியாற்றுகின்றனர். இதனால் இங்கு புலனாய்வுஅதிகாரிகள் இலகுவாக குறிவைத்து தாக்கப்படுகின்றனர்.

மிலேனியம் சிற்றி தேடுதலுக்கு பின்னரே கப்டன் நிலாம் பற்றிய (12 ஆம் பக்கம் பார்க்க)

# கொத்தணி வாக்களிப்பு நிலையங்களை பின்நகர்த்த உயர்நீதிமன்றம் உத்தரவு!

கொழும்பு —

**தேர்தல் ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட 10 யோசனைகள் அடங்கிய திட்டத்தை அமுல்செய்ய உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ள இதே வேளை கொத்தணி வாக்களிப்பு நிலையங்களை பின் நகர்த்துமாறும் உத்தரவிட்டது.**

**வடக்கு - கிழக்கின் கட்டுப்பாடற்ற பிரதேச வாக்காளர்களுக்காக அமைக்கப்படவுள்ள கொத்தணி வாக்களிப்பு மையங்கள் தொடர்பாக இந்த யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டன.**

**இலங்கை முற்போக்கு முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நெல்சன் பெரேரா தாக்கல் செய்த மனுவின் மீதான இடைக்கால தீர்ப்பு ஒன்றின் அடிப்படையில் இந்த அனுமதியை மூன்று நீதியரசர்கள் கொண்ட குழு வழங்கியது.**

**கொத்தணி வாக்குச்** (12 ஆம் பக்கம் பார்க்க)

## காலி நீதிமன்ற தொகுதியை படம் பிடித்த மூவர் கைது!

கொழும்பு —

காலி கோட்டையில் அமைந்துள்ள நீதிமன்றக் கட்டடத் தொகுதியையும், அதை அண்டிய பகுதிகளையும் விடியோ படம் எடுத்தபோது மூன்றுபேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நீதிமன்றக் கட்டடத் தொகுதி, தெற்கு பிராந்திய குற்றத்தடுப்புப் பணியகம், தேசிய புலனாய்வுப் பிரிவின் அலுவலகம், பிரதிப் பொலிஸ் மா அதிபரின் அலுவலகம் என்பவற்றை இவர்கள் வீடியோ படம் பிடித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மூவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவிருப்பதாக தென் பிராந்திய குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# மாணவர் எழுச்சி மாநாடு நாளை யாழ்.பல்கலையில்!

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்திலுள்ள மாணவர்கள் தமது கல்விக்குத் தடையாகவுள்ள பிரச்சினைகள் தொடர்பாகக் கூடி ஆராய்ந்து சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தும் மாணவர் எழுச்சி மாநாடு வரலாற்றில் முதல் தடவையாக நாளை காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட மாணவர்கள் இலங்கை அரசாங்கத்தினாலும், இராணுவத்தாலும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கிவருகின்றனர். இதற்கமைய வரலாற்றில் முதல் தடவையாக மாணவர்கள் தமது பிரச்சினைகளைத் தாமே கூடி ஆராயும் நோக்குடன் மேற்படி மாணவர் எழுச்சி மாநாடு நடத்தப்படவுள்ளது.


இந்த மாநாட்டில் இன்றைய தமிழ் மாணவர்களின் களநிலை, பல்கலைக்கழகங்களுக்கு தமிழ் மாணவர்கள் அழைக்கப்பட்டபோது ஏற்படுத்தப்பட்ட துரோகம், தமிழினத்தின் வரலாறு பாடத்திட்டத்தில் மறைக்கப்பட்டதும் நீக்கப்பட்டதுமான வரலாறு, இலங்கையின் கல்வி முறையில் உள்ள குறைபாடு, தமிழ் மக்களும் மாணவர்களும் மனிதாபிமான ரீதியாக பாதிக்கப்பட்ட விதம், சுனாமியும் மாணவர்களும் போன்ற தலைப்புக்களில் மாணவர்கள் ஒன்று கூடி ஆராயவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து மாணவர்கள் ஆராய்ந்த விடயங்கள் அனைத்தும் ஒன்றிணைக்கப்பட்டு பிரகடணம் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து மாணவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு தலைப்பிலும் ஆராயவுள்ளனர். மேற்படி மாணவர் மாநாட்டில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை துறைமுகத்தில் 22 சீன மீனவர்கள் கைது

கொழும்பு —



திருகோணமலை துறைமுகத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அனுமதியின்றி நுழைந்த பாரிய மீன்பிடிப் படகு ஒன்று கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

இதிலிருந்த 22 சீனர்கள் உட்பட 27 பேரைக் கடற்படையினர் கைது செய்தனர்.

கைதானவர்களில் ஐவர் இலங்கையர்கள் என்றும் - மீன்பிடிப்பதற்கான சட்டரீதியான அனுமதியைப் பெற்ற இந்தச் சீனர்கள் இலங்கையைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றில் பதிவுசெய்தே தொழிலில் ஈடுபட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதானவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

## டக்ளஸ் அலுவலகம் அருகே இரு தமிழ் இளைஞர் கைது!

கொழும்பு —

கொழும்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்துக்கு அண்மையில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடியதாகத் தெரிவித்து இரு தமிழ் இளைஞர்கள் நேற்றுமுன்தினம் இரவு படையினர் கைதுசெய் தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியள
(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடலட்டை பிடித்த மீனவர் டைனமற் அதிர்ச்சியில் மரணம்

யாழ்ப்பாணம் —

குருநகர் கடற்பரப்பில் கடலட்டை பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவர் டைனமற் வெடிச் சத்தத்தால் ஏற்பட்ட அதிர்ச்சியில் மரணமானார்.

இந்தச் சம்பவத்தில் குருநகரைச் சேர்ந்த முடியப்பு மரியதாஸ் (வயது 40) என்பவரே
(12 ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய மாவீரர் நாளை முன்னிட்டு சூழல் மேம்பாட்டு வாரம் பிரகடனம்

கிளிநொச்சி —

தமிழீழ தேசிய மாவீரர் நாளையொட்டி தமிழீழ தேசியசூழல் மேம்பாட்டு வாரம் கடைப்பிடிக்கப்படவுள் ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை இந்தச் சூழல் மேம்பாட்டு வாரம் கடைப்பிடிக்கப்படும். இது தொடர்பான வேலைத் திட்டங்களை தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையம் வெளியிட்டுள்ளது.

இந்தச் சூழல் வாரத்தின் நோக்கம் - சூழல் முன்னோடி தினத்தில் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை முழுமையாக செயற்படுத்தல். சீராக அகற்றப்படாமல் காணப்படும் கழிவுகளிலிருந்து தோற்றம் பெறுகின்ற கொடிய தொற்று நோய்களிலிருந்து எமது சமூகத்தை பாதுகாத்தல். மரநடுகையை மேற்கொள்ளல். சகல மக்களுக்கும் சூழல் நடவடிக்கைகளையும், விழிப்புணர்வையும் வழங்குதல்.

நடவடிக்கைகள் - திண்மக்கழிவு களை அகற்றல். பொலித்தீன், பிளாஸ்ரிக், அஸ்பெஸ்டஸ், பற்றறி, இரும்புக்கழிவுகள், போத்தல்கள் போன்ற சூழலுக்கு ஒவ்வாத கழிவுப்பொருட்களை அகற்றல்.

மாசடைந்த நீரைத்தேக்கி வைத்திருக்கும் பொருட்களை அகற்றுவதும், அவ்வாறான இடங்களை சுத்தம் செய்வதன் மூலம் தொற்றுநோய்களை தடுத்தலும்.

கழிவுவாய்க்கால்களை நேர்த்தியாக்குவதன் மூலம் கழிவு நீரினால் ஏற்படக்கூடிய நோய்களையும் அசௌகரியங்களையும் தடுத்தல். கழிவுசேகரிப்பான்களை பொருத்தமான இடங்களில் வைத்தல். கண்ணாடித் துண்டங்கள், தகரங்கள் போன்ற கழிவுப்பொருட்களை
(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய பிரதம கண்காணிப்பாளர்கள் நாளை யாழ்ப்பாணம் வருகின்றனர்!

யாழ்ப்பாணம் —

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாழ்.மாவட்ட நிலைமைகள் தொடர்பாகக் கண்காணிப்பதற்கு ஐரோப்பிய யூனியனின் பிரதான கண்காணிப்பாளர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளனர்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு பொது அமைப்புகள் பலவும் கோரிக்கை விடுத்துள்ள நிலையில், வழமைக்கு மாறாக இம்முறை தபால்மூல வாக்களிப்பு குறைவாகவே நடைபெற்றுள்ளது.

எனினும், யாழ்.மாவட்ட தேர்தல் நிலைமைகள் தொடர்பாகப் பார்வையிடுவதற்கு ஐரோப்பிய யூனியனின் பிரதான கண்காணிப்பாளர்கள் தமது அலுவலர்களுடன் நாளை யாழ். குடாநாட்டுக்கு வருகைதந்து -

யாழ்.அரச அதிபர், யாழ்.தேர்தல் தொகுதி தேர்தல் உதவி ஆணையாளர் உட்பட பலரைச் சந்தித்துக் கலந்துரையாடுவர் எனவும் தெரியவருகிறது.

# உயிருடன் இருப்பவரை இறந்துவிட்டதாக வாக்காளர் அட்டை விநியோகிக்கப்பட்டுள்து

வடமராட்சி

உயிருடன் இருக்கும் ஒருவருக்கு இறந்துள்ளார் எனக் குறிப்பிட்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. பிரஸ்தாப நபர் தேர்தல் திணைக்கள அதிகாரிகளிடமும், வடமராட்சி பிரதேசத்தின் பவ்ரல் தேர்தல் கண்காணிப்பாளரிடமும் முறையிட்டுள்ளார்.

கரவெட்டி பிரதேசத்தைச் சேர்ந்தவரும், பிரதேசசபை செயலாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றவருமான ஒருவருக்கே இந்தக்கதி ஏற்பட்டிருக்கிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் யாழ். தேர்தல் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்டு வருகிறது. யாழ்.தேர்தல் திணைக்களத்தால் இந்தமுறை இறந்தவர்களின் வாக்காளர் அட்டையில், இந்த வாக்காளர் இறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது என இறப்பர் முத்திரையிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நபரின் வாக்காளர் அட்டையிலும் இவ்வாறு இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இறந்துள்ளதாக குறிப்பிடப்பட்ட பிரஸ்தாப நபர் தாம் வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்க செல்லும்போது தம்மை வாக்கு மோசடியில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்படும் என்பதுடன், வாக்களிக்கும் உரிமையை இழக்க நேரிட்டுள்ளதாக புகார் செய்துள்ளார்.

பிரஸ்தாப நபர் ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டு வரும் பவ்ரல் அமைப்பில் வடமராட்சி பிரதேசத்திலுள்ள வாக்களிப்பு நிலையம் ஒன்றின் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (3)

## சமய தீட்சை வழங்கும் நிகழ்வு

புத்தூர்

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி இந்து மன்றத்தால் நடத்தப்படும் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை கல்லூரியில் உள்ள சோமாஸ்கந்தர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ செ.கைலாசநாதக்குருக்கள் தீட்சாகுருவாகச் செயற்பட்டு நிகழ்வுகளை நடத்தவுள்ளார்.

## பட்டதாரிகளுக்கான சம்பளம் வழங்கல்

யாழ்ப்பாணம்

யாழ்.வலய கல்வித்திணைக்களத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் (தற்பொழுது நியமனம் பெற்ற) பட்டதாரிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் யாழ். வல யக்கல்வி அலுவலக நிதிக் கிளையில் பெற்றுக் கொள்ளுமாறு கணக்காளர் ஆர்.துரை சிங்கம் தெரிவித்தார்.

மேற்படிக் கொடுப்பனவுகள் காசோலையாக வழங்கவுள்ளதால் உரியவர்கள் நேரடியாக வந்து பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவித்தார்.

## யாழ்.வன்னிப்பகுதி வேளாண் இடுபொருள் வாணிபர் கவனத்துக்கு

கிளிநொச்சி

ஹேலீஸ் நிறுவனத்தால் ஆக்கப்பெறும் உரங்களுக்கான ஆகக்கூடிய விற்பனைவிலை கீழ்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறித்த உரங்களை 2005.11.10 ஆம் நாளிலிருந்து அந்த விலையில் விற்பனை செய்யுமாறு யாழ்.வன்னிப்பகுதி வேளாண்இடுபொருள் வாணிப உரிமையாளருக்கு விடுதலைப் புலிகளின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

| தொ. எண் | உரத்தின் பெயர் (50 கிலோக்கிராம்) | வன்னிப் பகுதி விற்பனை விலை | யாழ்.மாவட்ட விற்பனை விலை |
|---|---|---|---|
| 01 | யூரியா | 656.00 | 677.00 |
| 02 | அமோனியா | 1391.00 | 1412.00 |
| 03 | வி -01 | 1638.00 | 1659.00 |
| 04 | ரீ.எஸ்.பி | 1824.00 | 1845.00 |
| 05 | ரி.டி.எம் | 1160.00 | 1181.00 |
| 06 | எம்.ஓ.பி | 1772.00 | 1793.00 |

# ஓட்டோ -சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்


யாழ்ப்பாணம்

வீதியோரமாக சைக்கிளில் சென்றவரை ஓட்டோ மோதியதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை பலாலி வீதியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் -தெல்லிப்பழையைச் சேர்ந்த எஸ்.விக்னேஸ்வரன் (வயது 57) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

சம்பவத்தில் காயமடைந்தவர், உரும்பிராயில் இயங்கும் சீமெந்து கூட்டுத்தாபனத்தில் வேலையை முடித்து பலாலிவீதி வழியாக வீடு நோக்கி சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த ஓட்டோ மோதி காயமடைந்தார். உடனடியாக தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்



### நடராஜா சண்முகராஜா
(சந்திரா)

மறவன்புலோவை பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும், தற்போது கோண்டாவில் ராசவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா சண்முகராஜா (சந்திரா) நேற்று (09.11.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் குகனேஸ்வரியின் அன்புக் கணவரும், மதிவதனி (யாழ்.பல்கலைக்கழக வணிகம் 2000), சிறிகுமரன் (கே.கே. போன்சொப்), கோவைக்குமரன் (கொழும்பு தேசிய வைத்தியசாலை பயிலுநர்), தவக்குமரன் (யாழ்.மத்தியகல்லூரி மாணவன்), சதீஸ்குமரன் (யாழ்.மத்திய கல்லூரி மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்னேஸ்வரனின் (கனடா) மாமனாரும், சோதிலிங்கம், தனபாலசிங்கம் (அமரர்), பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (10.11.2005) இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் ஆலடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தற்காலிக முகவரி;-
கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:-
குடும்பத்தினர்,
குமரன் (மகன்),
கே.கே.போன்சொப்.

(சி.4824)


நிரஞ்சனாஸ் சங்கானை
ஆர்ஜா, சோனியா அகர்வால் மற்றும் பலர் நடித்த
'ஒரு கல்லூரியின் கதை'
வாழ்க்கையில் மறக்கமுடியாதது கல்லூரி வாழ்க்கை
அதை நியமாகக் காட்டும் திரைக் காவியம்
காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)
விசேட காட்சியாக ரஜனி, சிவாஜி, அம்பிகா நடித்த
படிக்காதவன் 9.00 மணி (பு.நே)

வாடகைக்கு
காங்கேசன் சாலையில் (மாநகர எல்லைக்குள் ) காரியாலயப் பாவனைக்கு ஏற்ற 45' X 10' பரப்பளவுடைய மேல்மாடி கட்டடம் வாடகைக்கு உண்டு.
தொடர்பு :-விளம்பர இல - 45,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், (சி.4822)

மனோகரா யாழ்ப்பாணம்
யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக
DIGITAL dts SOUND
ஒலிநயத்துடன்
இளைய தளபதி
விஜய் வெடிக்கும்

சிவகாசி
விசேட காட்சி
காலை 8.30 மணிக்கு
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

சுன்னாகம் நாகம்ஸ்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின தீபாவளி வெளியீடு
ஸ்ரீகாந், ஆர்த்தி அகர்வால், நமீதா, வடிவேலு நடித்த

ஒரு ...
காட்சிகள்:-11.00,3.00,7.00, 9.30, 1.00 (பு.நே)

ராஜதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
தனுஷ், பிரியாமணி
அது ஒரு கனாக்காலம்
இசை:இளையராஜா
கதைவசனம்:பாலுமகேந்திரா
காட்சிகள்;-10.30, 2.30,6.30, 9.30 (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதினவெளியீடு
விக்ரம், அசின்
மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த
மஜா
காட்சிகள்:-10.30,2.30, 6.30, 9.30 (பு.நேரம்)

ஹற்றன் நஷனல் வங்கி
நடாத்தும் 2005 ஆம் ஆண்டுக்கான
கூடைப்பந்தாட்ட போட்டிகள்
கழகங்கள் - ஆண்கள், பெண்கள்
பாடசாலைகள் - ஆண்கள், பெண்கள்
மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள், பாடசாலைகள் தங்களது விண்ணப்பங்களை ஹற்றன் நஷனல் வங்கி யாழ்.கிளையில் சமர்ப்பிக்கும்படி வேண்டுகின்றோம்.
விண்ணப்ப இறுதித் திகதி :- 14.11.2005
அணி ஒழுங்குத் தெரிவு :- 16.11.2005 மாலை 4.30 மணி
இடம் :- ஹற்றன் நஷனல் வங்கி யாழ்.கிளை
அணி ஒழுங்குத் தெரிவின்போது பங்குபற்றும் கழகங்கள், பாடசாலைகளில் இருந்து ஓர் உறுப்பினரை சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
(C/4818) - முகாமையாளர்.

முகாமைத்துவக் கல்லூரியினால்
நடைமுறைப்படுத்தப்படும் aat கற்கை நெறிக்கான
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
தகைமைகள் :
(சா.த) பரீட்சையில் ஆறு சித்திகள் அல்லது (உ.த) பரீட்சையில் இரு சித்திகள்
மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்பப்படிவங்களுக்கும் முகாமைத்துவக் கல்லூரியில் தொடர்பு கொள்ளவும்.
மேற்கூறப்பட்ட தகைமையுடையோர்கள் தங்களது விண்ணப்பப்படிவங்களை 25.11.2005 க்கு முன்னதாக முகாமைத்துவக் கல்லூரி, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு நேரடியாகவோ பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.
குறிப்பு :
விரிவுரைகள் யாவும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறும்
நிர்வாகம்,
முகாமைத்துவக் கல்லூரி,
கரடிப்போக்கு சந்தி,
கிளிநொச்சி.
(C/4817)

Koyo
DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO

52,900.00
CF 90C
4 Gear இன் சிறப்புகள்
எரிபொருள் சிக்கனம்,
குறைந்தளவு தேய்மானம்,
கூடிய உத்தரவாதத்துடன்,
தேவையான அளவு
உதிரிப்பாகங்களைப்
பெற்றுக்கொள்ளலாம்.
DAIDO
எங்களிடம் தாராளமாக Honda, Yamaha, Suzuki, Bajaj, Daido, Yamato மற்றும் எல்லா சீன தயாரிப்புகளுக்கு பொருந்தும் உதிரிப்பாகங்கள் வேண்டிய அளவில் கிடைக்கும்


ஏக முகவர்
மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவு
செரென்டிப் மோட்டர் என்டர்பிறைஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை கொழும்பு - 10.
தொலைபேசி 01-2341580-1, 2438779, பெக்ஸ் 01-2454608 E-mail: zme@slt.lk


## 2 ஆம் வருட அஞ்சலி

மலர்ந்தது
14
05
1945



ஜோதியானது
10
11
2003


### இராமநாதன் ஜெயசிங்கம்
(Attorneyat -Law, Notary Public, J.P.U.M &Commissioner of Oaths)

ஈசனுடன் சென்றடைந்து
ஈராண்டு முடிந்த போதும்
ஈர விழிகள் காயவில்லை நாம்
பரமனே விடை தருவாய்
ஆறுதலாய் சொர்க்கத்தில் அமைதிகாண
ஆண்டவனை நிதமும் இறைஞ்சுகின்றோம்

குடும்பத்தினர்.

(C/4819)

# சிறுவர் பாதுகாப்பு நிதியத்துக்கு சு.ப.தமிழ்ச்செல்வன் பாராட்டு!



கிளிநொச்சி

தமிழர் தாயகப் பகுதியில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் சேவையானது நீண்டகால வரலாற்றைக் கொண்டது. இந்த நிறுவனம் சமூகத்திற்கும், குறிப்பாக சிறுவர்களுக்கு போரின்போதும், போர் ஓய்ந்த காலப்பகுதியிலும் சுனாமிக்குப் பின்னரும் பரந்தளவில் உதவிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கதென அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் இலங்கைக்கான தலைமை அதிகாரி றிச்சாட் மாவெர் தனது சேவையை முடித்து செல்வதையிட்டும் மற்றும் அவரது இடத்திற்கு புதிதாக வந்துள்ள கிரேக் ஓரேக் பிராங்ளினை வரவேற்றும் சமாதான செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய சேவை முடிந்து செல்லும் மாவெர், சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் திட்டங்களுக்கு விடுதலைப் புலிகள் வழங்கிய ஒத்துழைப்பிற்குத் தனது நன்றியைத் தெரிவித்தார். அத்துடன், புதிதாக வந்துள்ளஅதிகாரி விடுதலைப் புலிகள் மற்றும் சமூகத்தினருடன் இணைந்து தொடர்ந்து திட்டங்களை அமுல்படுத்துவார் எனத் தெரிவித்தார்.

2006 ஆம் ஆண்டுக்கான சிறுவர் பாதுகாப்பு நிலையத்தின் திட்டமாக கல்வி மற்றும் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுதல் போன்ற விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக புதிய தலைமை அதிகாரி பிராங்ளின் இந்த சந்திப்பில் தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் - கடந்த இரண்டு தசாப்த காலமாக தமிழ் மக்கள் சொல்ல முடியாத துன்பங்களை அனுபவித்து வந்தனர். இந்தப் போரினால் பல்வேறு இடப்பெயர்வுகள் ஏற்பட்டு பொருளாதார கட்டுமானங்கள் சிதைக்கப்பட்டன.

இதில் பெரும்பாலான சிறுவர்கள் பாதிக்கப்பட்டனர். இந்த நிலையில் சிறுவர் பாதுகாப்பு நிதியம் இந்த சிறுவர்களுக்காக தொழில்சார் பயிற்சி நெறிகளையும், தொழில்நுட்பக் கல்வியையும் வழங்கி அவர்களை ஊக்குவித்தது.

எனவே, சிறுவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த சிறுவர் பாதுகாப்பு நிதியம் மேற்கொள்ளும் அனைத்து திட்டங்களுக்கும் விடுதலைப் புலிகள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவர் எனத் தெரிவித்தார்.

# ஐஸ் மஞ்சுவின் வீட்டில் பொலிஸார் சோதனை!

கொழும்பு

இராணுவப் புலனாய்வுத் துறை அதிகாரி லெப்.கேணல் ரிஸ்வி மீடின் கொலையாளியான பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த ஐஸ் மஞ்சுவின் வீட்டில் விசேட பொலிஸ் குழுவினர் சோதனை நடத்தினர்.

ஐஸ் மஞ்சுவின் மனைவி மற்றும் குழந்தையைக் கொழும்புக்கு அழைத்து வந்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸாரே கட்டுகஸ்தோட்டவில் உள்ள அரவது வீட்டில் தேடுதல் நடத்தினர். திருமலையிலிருந்து எட்டு மாதங்களுக்கு முன்பாகவே கட்டுகஸ்தோட்டவில் ஐஸ் மஞ்சு குடியேறியுள்ளார்.

இந்த வழக்கில் தொடர்புடைய ஐஸ் மஞ்சுவின் நண்பர்களான புளொட் பாபு, சம்லி றொசான், சம்லியின் சகோதரர்கள் ஆகியோரைப் பொலிஸார் கைதுசெய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (01)

# ஆயுதங்களைக் கோருகிறது வட-கிழக்கு சிங்கள அமைப்பு!

கொழும்பு

தமது அமைப்பின் உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

திருகோணமலையில் தற்போது நிலவும் சூழ்நிலையில் தமது உறுப்பினர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் தமது பாதுகாப்பை கருத்தில் கொண்டு ஆயதங்கள் வழங்கப்படவேண்டும் எனவும் அந்த அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் 27 ஆம் திகதி இனந்தெரியாதோரால் வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பின் உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த நிலையில் அமைப்பின் உறுப்பினர்களுக்கு விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் உள்ளதாகவும் அந்த அமைப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

# சம்பூருக்குச் சென்ற தமிழ் இளைஞர் கைது!

திருகோணமலை

திருகோணமலையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான சம்பூருக்கு சென்ற இளைஞன் கட்டப்பறிச்சான் இராணுவ சோதனைச்சாவடியில் வைத்து கைதுசெய்யப்பட்டார். கிளிவெட்டி - குமாரபுரத்தை சேர்ந்த கிருஷ்ணபிள்ளை அருள்ராஜா (வயது-20) என்ற இளைஞரே கைதுசெய்யப்பட்டவராவார்.


கிளிநொச்சியிலுள்ள கராஜ் ஒன்றில் வேலை செய்துவந்த இளைஞன், சம்பூருக்கு சென்று கொண்டிருந்தவேளை கட்டைபறிச்சான் சோதனைச்சாவடியில் சோதனையிட்ட பின்னர் இவரை கைதுசெய்தனர்.

தமிழீழ எழுச்சிப்பாடல்கள் அடங்கிய இறுவட்டுக்களும், படங்கள் சிலவும் இவர் வைத்திருந்த பையிலிருந்ததையடுத்து சந்தேகத்தின் பேரில் இவரைக் கைதுசெய்ததாக படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இளைஞன் நேற்றுமுன்தினம் மாலை மூதூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டதாக தெரியவருகிறது. (04,10,01)

# ரணிலின் தேர்தல் செலவுகளுக்கு பாதாள உலகக்குழுவும் நிதியுதவி?

## மங்கள சமரவீர குற்றச்சாட்டு



கொழும்பு

தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் பரப்புரைகளுக்காக பாதாள உலகக் குழுக்கள், தரகர்கள், போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பெருமளவு நிதியுதவி அளித்துள்ளனர் என்று அமைச்சர் மங்கள சமரவீர குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் ரணில் விக்கிரமசிங்க இதுவரை 684 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளார். இத்தொகையை ரணிலை அதிகாரத்துக்குக் கொண்டுவர விரும்பும் பாதாள உலகக் குழுக்கள், தரகர்கள், போதைப்பொருள் கடத்தல்காரர்கள் அளித்துள்ளனர்.

அரசாங்க அமைச்சர்கள் தொடர்பில் அவதூறு விளம்பரங்களை வெளியிடும் இலத்திரனியல் ஊடகங்கள், சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும். இது தொடர்பாக லங்காதீப மற்றும் இரு தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு சட்டநடவடிக்கை உத்தரவுக் கடிதம் அனுப்பியுள்ளோம்.

தொலைக்காட்சி விவாதங்களில் ஜே.வி.பி. உறுப்பினர்கள் பங்கேற்பதை சில ஊடகங்கள் தடை செய்துள்ளன. ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தேர்வு செய்யப்பட்டால், தமது சட்ட விரோத செயற்பாடுகளைத் தொடர்வதற்காகவே அந்த நிறுவனங்கள் இத்தகைய செயற்பாடுகளை மேற்கோள்கின்றன.

அரசாங்கத்தால் அளிக்கப்படும் உரிமங்கள் மூலமாக ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்க அந்த நிறுவனங்கள் முயற்சிப்பதை நாம் அனுமதிக்க முடியாது என்றார்.

இதேவேளை, மங்கள சமரவீரவின் இந்தக் குற்றச்சாட்டுகளை சுவர்ணவாஹினி தொலைக்காட்சி இயக்குநர் ஜீவிக எதிரிசிங்க நிராகரித்துள்ளார்.

# ரணில் ஜனாதிபதியானதும் புதிய வரவு-செலவுத் திட்டம்!

## ஐ.தே.க தெரிவிப்பு

கொழும்பு

எதிர்வரும் 17 ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றதும் புதிய வரவு - செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி பொதுச்செயலாளர் திஸ்ஸஅத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய போது -


ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட அறிக்கையைத் தாக்கல் செய்யலாம். அனால் அது நிறைவேற்றப்படாது தற்போது தாக்கல் செய்யப்படும் அறிக்கை நாடாளுமன்ற விவாதம், வாக்கெடுப்பு நடைபெறும் வரை காகிதத்தில்தான் இருக்கும்.

நாடாளுமன்றத்தில் ஒரு வரவு - செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டால் மற்றொரு அறிக்கை தாக்கல் செய்வதை அரசியல் யாப்பு தடுக்கவில்லை. தேர்தலுக்கு முன்பாக தாக்கல் செய்வது என்பது தேர்தல் லாபங்களுக்காகத்தான்.

ரணில் மீது கணனி கொள்வனவு முறைப்பாடு செய்த அமைச்சர் மங்கள சமரவீர தண்டிக்கப்படவேண்டும். ஆணைக்குழு முன்பாக தவறான தகவல்களை அவர் அளித்துள்ளார். உரிய சட்டவிதிகளின் படி அவருக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்படலாம். இதனால் அமைச்சர் சமரவீரவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு நாம் விலியுறுத்தவுள்ளோம்.

சுதந்திரக் கட்சி வேட்பாளர் அல்லாத மகிந்த ராஜபக்ஷவினது மகிந்த சிந்தனைகளுக்கு சுதந்திரக் கட்சியினது நிர்வாகக் குழுவினது ஒப்புதலை அவர் பெற முடியுமா என்றும் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பினார்.

# வேட்பாளர்களின் சொத்து விபரங்களை வெளியிட தேர்தல் ஆணையாளர் மறுப்பு



கொழும்பு

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களது சொத்து விபரங்களைத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவிக்க மறுத்ததற்கு சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான கட்சி வேட்பாளர்களான மகிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரது சொத்து விபரங்களை உள்ளிட்ட விபரங்களை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவிடம் ராவய ஆசிரியர் கோரியிருந்தார்.

ஆனால் இந்த வேண்டுகோளை தேர்தல் ஆணையாளர் நிராகரித்திருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது. தேர்தல் ஆணையகத்தின் இந்த முடிவானது நவம்பர் 17 ஆம் திகதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களது சொத்து விபரங்களை மக்கள் அறிவதைத் தடுக்கும் வகையிலான அவர்களது உரிமையை மீறுகின்ற செயற்பாடாகும்.

இது தொடர்பான விபரங்களை அறிவதற்கான சட்ட நடவடிக்கைகளையும் மீறுவதாக தேர்தல் ஆணையாளரின் முடிவு உள்ளது. தேர்தல் ஆணையாளரின் இந்த முடிவுக்கு ஊடக சுதந்திரத்தை வலியுத்தும் அமைப்பு என்ற வகையில், நாம் வன்மையாகக் கண்டனம் தெரிவிக்கிறோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# விசா கோரி வந்தவர் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

கொழும்பு

இலங்கையில் தனக்கு போதிய பாதுகாப்பு இல்லாததால் அமெரிக்காவுக்குச் செல்வதற்கு விசா வழங்குமாறு கோரிய நபரை அமெரிக்க தூதரகத்தைச் சேர்ந்தவர்கள் கொள்ளுப்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதனிடையே கொள்ளுப்பிட்டி 13 ஆவது ஒழுங்கையிலேயே கடந்த திங்கட்கிழமை இரவு தற்கொலையங்கி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்த அங்கிக்கும் விசா கேட்டு வந்த இந்த நபருக்கும் இடையில் ஏதேனும் தொடர்புகள் உள்ளனவா என்பது குறித்து கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (01)

# தமிழ் இளைஞர்கள் இருவர் கொழும்பில் வைத்து கைது!

கொழும்பு

கொழும்பு விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேராவின் உத்தியோக பூர்வ இல்லத்திற்கருகே சந்தேகத்திற்கிடமாக நடமாடியதாக இரண்டு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - பாக்கியராஜா டஸ்மன்ராஜ் (குருமன் காடு-வவுனியா) வீரந்துபதி (வவுனியா)ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். கைதான நபர்கள் மீது கறுவாத்தோட்ட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கையுடனான 6 ஆவது ஒருநாள் போட்டி:

# 7 விக்கெட்டுக்களால் இந்திய அணி வெற்றி!



ராஜ்கோட் —

இந்திய - இலங்கை அணிகளுக்கிடையில் நேற்று ராஜ்கோட்டில் நடைபெற்ற 6 ஆவது சர்வதேச ஒரு நாள் போட்டியில் இந்திய அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இந்திய அணியின் கப்டன் ட்ராவிட் நேற்று விளையாடவில்லை. அவருக்குப் பதிலாக சேவாக் கப்டனாக இருந்தார். நாணயச் சுழற்சியில் வென்ற ஷேவாக், இலங்கை அணி



யைத் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

தொடக்க ஆட்டக்காரர்களாக தரங்க, ஜெயசூர்யா களமிறங்கி னர். அதிரடி ஆட்டக்காரரான ஜெயசூர்யா சந்தித்த பந்துகளை பவுண்டரிகளாக விளாச ஆரம்பித்தார்.

4 பவுண்டரிகள் விளாசிய அவர், சிறீ சந்த் பந்தை அடிக்க முயன்ற போது விக்கெட் காப்பாளர் டோனிடம் பிடிகொடுத்து வெளியேறினார். ஜெயசூர்யா 17 பந்துகளைச் சந்தித்து 19 ஓட்டங்களை எடுத்தார்.

அதன் பின்னர் சங்ககார வந்தார். அவராலும் நிலைத்து நிற்க முடியவில்லை. பதான் பந்தில் டெண்டுல்கரிடம் பிடிகொடுத்து வெளியேறினார். அவர் எடுத்த ஓட்டங்கள் 9 மட்டுமே. 13 பந்துகளை சந்தித்து 2 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களை எடுத்திருந்தார்.


அதைத் தொடர்ந்து ஜெயவர்த்தன களம் இறங்கி தரங்கவுடன் ஜோடி சேர்ந்தார். அடுத்த சில நிமிடத்தில் தரங்க ஆர்.பி.சிங்கின் பந்தில் விக்கெட் காப்பாளர் டோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவர் 42 பந்துகளைச் சந்தித்து 28 ஓட்டங்களை எடுத்திருந்தார். இதில் 4 பவுண்டரிகள் அடங்கும்.

பின்னர் ஜெயவர்த்தனவுடன் கப்டன் அத்தப்பத்து ஜோடி சேர்ந்தார். விக்கெட்டுகள் அடுத்தடுத்து சரிந்ததால் அவர்கள் நிதானமாக ஆடி நிலைத்து நிற்க முயன்றனர். ஆனால், அது பலனளிக்கவில்லை. ஜெயவர்த்தன, முரளி கார்த்திக் வீசிய பந்தை அடிக்க முயன்றபோது - விக்கெட் காப்பாளர் டோனி பந்தைப் பிடித்து ஸ்ரொம் செய்து ஜெயவர்த்தனவை வெளியேற்றினார். அவர் 14 பந்துகளைச் சந்தித்து 14 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

அப்போது இலங்கை அணி 16.1 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 79 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தது. அத்தப்பத்துவுடன் டில்சான் ஜோடி சேர்ந்தார்.

அடுத்து கூடுதலாக 4ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்த நிலையில் கப்டன் அத்தப்பத்து வீழ்ந்தார். ஆர்.பி.சிங் பந்தை அடித்த அவர் ஷேவாக்கிடம் பிடிகொடுத்து வெளியேறினார். 18 பந்துகளைச் சந்தித்து 9 ஓட்டங்களை எடுத்திருந்தார். அடுத்து ஆர்னோல்ட் களத்துக்கு வந்தார்.

டில்சான் அகமதாபாத் போட்டி போலவே நிலைத்து நின்று ஆடினார். அவர் ஒரு பக்கம் ஓட்டங்களைக் குவித்துக் கொண்டிருந்தாலும் மறுமுனையில் விக்கெட்டுக்கள் வேகமாகச் சரிந்து



கொண்டிருந்தன. 8 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்த ஆர்னோல்ட் ரன் அவுட்டாகி பவிலியன் திரும்பினார். அடுத்து வந்த வாஸ் - கார்த்திக்கின் பந்தில் போல்டானார். அவர் 9 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்தார்.

அப்போது 35.3 ஓவர்களை



சந்தித்திருந்த இலங்கை 7 விக்கெட் இழப்புக்கு 132 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதற்கிடையே டில்சான் அரைச்சதம் அடித்தார். 53 பந்துகளைச் சந்தித்து, அவர் இந்த ஓட்டங்களை எடுத்திருந்தார். அவருடன் உபுல் சந்தன ஜோடி சேர்ந்து ஆடினார். டில்சான் கூடுதலாக 9 ஓட்டங்கள் எடுத்தபோது ரன்அவுட்டானார். டில்சான் 8 பவுண்டரிகளுடன் 59 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

சந்தனவுடன் மஃறூவ் ஜோடி சேர்ந்தார். சந்தன அதிரடியாக பந்துகளை விளாசினார். எதிர் முனையில் இருந்த மஃறூவ் 4 ஓட் டங்களை எடுத்திருந்தபோது ஆர். பி.சிங் அவரை போல்டாக்கினார். அடுத்த சில நிமிடத்தில் சந்தனவும் ஆட்டமிழந்தார். அவர் 5 பவுண்டரிகளுடன் 30 ஓட்டங்கள் எடுத்தார். அத்துடன் இலங்கை 42.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 196 ஓட்டங்களை எடுத்தது .


பந்துவீச்சில் ஆர்.பி.சிங் - 4, முரளிகார்த்திக் - 2, சிறீசாந்த் மற்றும் பதான் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இதன்பின்னர் 197 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணியில் ஆரம்ப வீரர்களாக கம்பீர் மற்றும் டெண்டுல்கர் ஜோடி சேர்ந்தனர். இதில் கம்பீர் அதிரடியாக விளையாடினார். இந்த நிலையில் அணி 43 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 27 பந்துகளில் 6 பவுண்டரிகள் அடங்கலாக 28 ஓட்டங்களைப் பெற்றிருந்த கம்பீரின் விக்கெட் வீழ்த்தப்பட்டது.

இதன்பின் டெண்டுல்கருடன் சேவாக் இணைந்தார். எனினும் அணி 57 ஓட்டங்களைப்பெற்றிருக்கையில் 19 ஓட்டங்கள் பெற்றிருந்த சச்சின், ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார். இவர் 30 பந்துகளில் 3 பவுண்டரிகள் அடங்கலாக இந்த ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இவரின் ஆட்டமிழப்பையடுத்து சேவாக்குடன் கைவ் இணைந்தார். இவர்கள் இருவரும் சிறப்பாக விளையாடிக்கொண்டிருக்கையில் சேவாக் கின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. 22 பந்துகளில் 4 பவுண்டரிகள் அடங்கலாக 22 ஓட்டங்களை இவர் பெற்றிருந்தார்.

இதன்பின் கைவ்வுடன் யுவராஜ்



சிங் இணைந்தார். இவர்கள் இருவரும் பொறுப்புடன் விளையாடி அணியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் சென்றனர். 33 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்த இந்திய அணி 197 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. இதில் 71 பந்துகளில் 3 பவுண்டரிகள் அடங்கலாக 38 ஓட்டங்களை எடுத்த கைவும், 67 பந்துகளில் 3 சிக்ஸர், 9 பவுண்டரிகள் அடங்கலாக 79 ஓட்டங்களைப் பெற்ற



யுவராஜ்சிங்கும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்துவீச்சில் டில்ஹார பெர்னாண்டோ 2, உபுல்சந்தன 1 விக்கெட்டையும் கைப்பறினர்.

ஆட்டநாயகனாக ஆர்.பி.சிங் தெரிவானார் நேற்றைய போட்டியில் இலங்கை அணியின் நட்சத்திர பந்து வீச்சாளர் முரளிதரன் காயம் காரணமாக விளையாடவில்லை.

# இரண்டாவது டெஸ்டிலும் லாங்கர் இடம்பெறவில்லை!



சிட்னி —

காயம் குணமடையாததால் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டிலும் அவுஸ்ரேலிய அணியின் ஆரம்ப துடுப்பாட்டவீரர் லாங்கர் இடம்பெறவில்லை.

அவுஸ்ரேலியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையே இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் வரும் 17 இல் ஹோபர்ட்டில் தொடங்குகிறது. முன்னதாக நடந்த முதல் டெஸ்டில் அவுஸ்ரேலிய அணி 379 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் முதுகுக் காயம் காரணமாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஜஸ்டின் லாங்கர் இடம் பெறவில்லை. இவருக்குப் பதிலாக மைக்கேல் ஹுசே களமிறங்கினார்.

இந்த நிலையில் இரண்டாவது டெஸ்டிலும் லாங்கர் பங்கேற்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவரது காயம் இன்னும் முழுமையாகக் குணமடையாததால் குறைந்தது 2 வாரங்களாவது கட்டாய ஓய்வு தேவை என வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

காயம் குறித்து லாங்கர் கூறுகையில் -

டெஸ்ட் போட்டியில் பங்கேற்காமல் இருப்பது கஷ்டமான ஒன்றுதான். அதேநேரத்தில் எனது உடல் நிலையையும் கருத்திற்கொள்ள வேண்டியிருக்கிறது. சில நாட்கள் ஓய்வுக்குப் பிறகு மீண்டும் களமிறங்குவேன். அணிக்குத் திரும்ப வேண்டும் என்பதற்காக அவசரப்பட விரும்பவில்லை எனத் தெரிவித்தார்.

# இன்று நடைபெறவுள்ள உதைபந்தாட்டப் போட்டி!

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாண வலய மட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று காலை 8.30 மணி தொடக்கம் பகல் 1 மணிவரை யாழ். பொது விளையாட்டரங்க மைதானத்தில் நடைபெறவுள்ளது. இன்று நடைபெறும் ஆட்ட விபரம் வருமாறு :-

**18 வயதுப் பிரிவு** (மு.ப. 8.30)

யா/ஊரெழு கணேச வித்தியாலயம் எதிர் யா /புனித சாள்ஸ் மகாவித்தியாலயம். யா/மத்திய கல்லூரி எதிர் அச்சுவேலி சைவப்பிரகாச வித்தியாலயம்

**16 வயதுப் பிரிவு (மு.ப. 9 மணி)**

யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர் யா/புனித ஜோசப் வித்தியாலயம். யா/உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம் எதிர் யா /செங்குந்தா இந்துக் கல்லூரி.

**14 வயதுப் பிரிவு**

யா/மத்திய கல்லூரி எதிர் யா/ நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் யா /முத்துத்தம்பி வித்தியாலயம் எதிர் யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்

**16 வயதுப் பிரிவு**

யா/செங்குந்தா இந்துக் கல்லூரி எதிர் யா/ புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயம்.

யா புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயம் எதிர் உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம்

**18 வயதுப் பிரிவு (பி.ப. 1.00 மணி)**

யா/இந்துக் கல்லூரி எதிர் யா/ ஊரெழு கணேசா வித்தியாலயம். (58)

## விளையாட்டு

# பயிற்சி ஆட்டத்தில் இங்கிலாந்து 6 விக்கெட்டுக்களால் படுதோல்வி!

லாகூர் —



பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

இதற்கு முன்பாக லாகூரில் பாகிஸ்தான் 'ஏ', இங்கிலாந்து அணிகள் மூன்று நாள் பயிற்சிப் போட்டியில் விளையாடின.

முதல் இனிங்ஸில் இரு அணிகளும் குறைந்த ஓட்டங்களே எடுத்தன. இங்கிலாந்து 126, பாகிஸ்தான் 'ஏ' 138.

இரண்டாவது இனிங்ஸில் இங்கிலாந்து அணி - கொலிங்வூட் (61), ஸ்ரரஸ் (56), கைல்ஸ் (49) ஆகியோரின் துணையுடன் 256 ஓட்டங்களை எடுத்தது.

இரண்டாவது இனிங்ஸில் 245 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய பாகிஸ் தான் 'ஏ' அணி, இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 31 ஓட்டங்களை எடுத்திருந்தது.

தொடர்ந்து மூன்றாம் நாள் ஆடிய பாகிஸ்தான் 'ஏ' வீரர்கள் இங்கிலாந்தின் பந்து வீச்சாளர்களை எளிதில் சமாளித்து ஓட்டங்களைக் குவித்தனர்.

இறுதியில் அந்த அணி 4 விக்கெட் இழப்புக்கு 246 ஓட்டங்களைக் குவித்து வெற்றிபெற்றது. இம்ரான் பர்கத் ஆட்டமிழக்காமல் 37 ஷாகித் நசீர் 43 சாகித் யூசுப் 57 கசன் ராசா ஆட்டமிழக்காமல் 71 ஓட்டங்களை எடுத்தனர்.

இங்கிலாந்து தரப்பில் பிளின்ரொப் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஆஷஸ் தொடரில் சாதித்த இங்கிலாந்து பாகிஸ்தான் மண்ணில் திணறுகிறது. முதல் டெஸ்ட் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்தத் தோல்வி இங்கிலாந்துக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

# எம் தேசியத்தை உறுதிபட எடுத்துரைக்க ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்போம்!

## நயினாதீவு சனசமூக நிலையங்களின் சமாசம்

யாழ்ப்பாணம் —

தொடர்ந்து வர இருக்கும் ஆறு ஆண்டுகளுக்கு தனது தலைவிதியை நிர்ணயிக்கப்போகும் சர்வாதிகாரம் படைத்த ஒரு தலைவரை தேர்ந்தெடுக்கும் தேர்தலை எதிர்வரும் 17 ஆம் திகதி சந்திக்கிறது சிறிலங்கா.

இந்தத் தேர்தலினால் மட்டுமல்ல இலங்கையின் எந்தத் தேர்தலாலும் ஈழத்தமிழர்களாகிய எமக்குக் கிடைத்த, கிடைக்கப் போகும் பயன் என்ன?

யார் இந்த மகிந்த?

யார் இந்த ரணில்?

பௌத்த - சிங்கள பேரினவாதத்தில் விஞ்சி நிற்பது நானா? நீயா? எனப் போட்டி போட்டுக் கொண்டு தேர்தல் களத்தில் வலம் வரும் இவர்களை நாம் இனங்கண்டு கொண்டுள்ளோம். எமது உரிமைகளைக் கொடுக்க மறுத்து தனது உள்ளூர் பேரினவாதக் கூட்டாளிகளான ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமய கட்சிகளுடன் துணை சேர்ந்து எமக்கெதிராக அடக்குமுறைகளைப் பிரயோகிக்க முற்படுகிறார் மகிந்த ராஜபக்ஷ.

ரணிலோ, சந்திரிகா அம்மையாரையும் கூட்டுச் சேர்த்து சர்வதேச உதவியுடன் ஒரு அரைகுறைத் தீர்வை தமிழர்களின் தலையிலே சுமத்த நினைக்கிறார். முடியாவிடில் அமெரிக்க, பிரிட்டன், இந்திய வல்லாதிக்க சக்திகளின் உதவியுடன் எமது போராட்ட வலுவினை அழித்தொழிக்கலாம் என கனவுகாண்கிறார்.

இவ்வாறு நயினாதீவு சனசமூக நிலையங்களின் சமாசம் ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு கோரி விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளதுடன் -

நாம் சோறு வேண்டாம் சுதந்திரம் வேண்டும் என்றோம். உயிர் வேண்டாம் உரிமை வேண்டும் என்று களமாடினோம்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஈழத்தமிழர்களாகிய நாம் வாக்களிப்பது ''எமது விடுதலைக்கான புனித சுதந்திர வேள்வியிலே ஆகுதியாகி வித்துக்களாய் புதைந்து எமக்கு நிழல் தரும் விருட்சங்களாகி நிற்கும் எம் மாவீரக் குழந்தைகளின் மாபெரும் தியாகத்துக்கு இழுக்கானது'' மானமுள்ள தமிழன் எவனும் இந்தத் தேர்தலில் வாக்களிக்க மாட்டான் என்பது திண்ணம்.

தமிழ் மக்களாகிய நாம் இந்தத் தேர்தலை முற்றாக நிராகரிப்பதன் மூலம் எமது தேசியத்தையும், எமக்கு ஒரு தனிநாடு உண்டென்பதையும், எமக்கென்றோர் தேசியத் தலைமை உண்டு என்பதையும் சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கும் சர்வதேசத்துக்கும் உறுதிபட எடுத்துரைப்போம் எனவும் கூறியுள்ளது.

# வடமராட்சி பிரதான வீதி வாய்க்கால்கள் நீண்டகாலமாகத் திருத்தப்படவில்லை!

நெல்லியடி —

வடமராட்சிப் பகுதியில் காணப்படும் பிரதான வீதிகளின் கான்கள் -குப்பைகள் கொட்டும் இடமாக இருப்பதால், வீதியோரத்தில் செல்லும் வெள்ளம் பிரதான வீதிகளில் தேங்கிநிற்கின்றது.

இதேபோல் மகாத்மா வீதி, ஐயனார் கோயிலடி வீதிகளும் கடந்த 25 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாமல் இருப்பதால், அந்தப்பகுதியில் வெள்ளம் தேங்கிநின்று தொற்றுநோய்கள் பரவ வாய்ப்புள்ளதாகவும், அந்தப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்தனர்.

வீதியில் தேங்கிநிற்கும் வெள்ளத்தை வெளியேற்றுவதற்காக வீதியின் பாதைகளைக் குறுக்காக வெட்டுவதால், அதனூடாகப் போக்குவரத்தை மேற்கொள்ளும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும், இது தொடர்பாக உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (12)

# அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான விபரம் திரட்டல்

கோப்பாய் —

கோப்பாய் பிரதேசத்தில் எதிர்வரும் ஆண்டு நடைமுறைப் படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களில் கிராம மக்களையும் பங்குகொள்ளச் செய்யும் முகமாக ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் கோப்பாய் பிரதேச செயலகம் ஊடாக அபிவிருத்திப் பணிகளுக்கான விபரங்கள் திரட்டப்பட்டு வருகிறது.

இந்த விபரந்திரட்டும் நடவடிக்கையின் போது மக்களிடமிருந்து பிரதேசத்தின் தேவைகள், அபிவிருத்தியில் மக்களின் பங்கு பிரதேச அபிவிருத்தியில் உள்ள தடைகளும் சவால்களும் போன்ற விடயங்கள் ஆராயப்படுகிறது.

மக்கள் மேற்படி கருத்துக்களை பிரதேச செயலகம், பிரதேச சபை, கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்களிடம் சமர்ப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சோதிவேம்படி தமிழ்க் கலவன் பாடசாலைக்கு இரு மாடி கட்டடம்

மானிப்பாய் —

மானிப்பாய் சோதிவேம்படி தமிழ்க் கலவன் பாடசாலைக்கு 65 லட்சம் ரூபா செலவில் இரண்டு மாடிக்கட்டடம், நிகொட் நிறுவனத்தின் உதவியுடன் கட்டப்பட்டு வருவதாக பாடசாலையின் அதிபர் கே.அருட்பிரகாசம் தெரிவித்தார்.

இந்தப் பாடசாலை முன்னர் பழமைவாய்ந்த கட்டடத்தில் போதிய வகுப்பறைகள் இன்றிப் பெரும் சிரமத்தின் மத்தியில் இயங்கி வந்தது. இந்த நிலைமை தொடர்பாக பாடசாலையின் அதிபர் பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பாடசாலைக்கு புதிய கட்டடம் அமைக்க வேண்டிய தேவையினைச் சுட்டிக்காட்டியதையடுத்தே, நிகொட் நிறுவனம் 65 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

தற்போது, இந்தப் பாடசாலைக்கு இரு மாடிக் கட்டடத்துக்கான வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. அதேவேளை, இந்தப் பாடசாலை மானிப்பாய் இந்துக் கல்லூரியின் கட்டடத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. (100)

# சுன்னாகம் சந்தியிலுள்ள குழியால் போக்குவரத்துக்கு பெரும் அபாயம்!

உடுவில் —

சுன்னாகம் சந்தியில் வெட்டப்பட்டுள்ள பாரிய குழிகளால் போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சலாகவுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் ரெலிகொம் நிறுவனத்தால் நிலத்தடி கேபிள் அமைப்பதற்காக இந்தப் பாரிய கிடங்கு வெட்டப்பட்டது. பல தொலைபேசி இணைப்புகள் ஒன்று சேரும் இந்தப் பாரிய கிடங்குக்குள் வைப்பதற்கென சீமெந்தினால் அமைக்கப்பட்ட பெரிய தொட்டியும் கொண்டு வந்து தெருவோரத்தில் வைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது பெய்யும் மழையால் நீர் வழிந்தோட முடியாது தேங்கி நிற்கிறது. பல நாட்களாகக் குழி மூடப்படாது, வீதியின் அரைவாசிப் பகுதியை ஆக்கிரமிப்பதால் வாகனங்கள் போக்குவரத்து நெருக்கடிக்குள்ளாவதுடன், அடிக்கடி விபத்துகளும் ஏற்படுகின்றன.

இந்த விடயம் தொடர்பாக வலி. தெற்கு பிரதேச சபையோ, வீதி அபிவிருத்தி அதிகார சபையோ நடவடிக்கை எடுக்காததையிட்டு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (101)

# வழிகாட்டல் வகுப்பு

யாழ்ப்பாணம் —

ஆத்திசூடி வீதி - கந்தர்மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி சித்திரப் பயிற்சி நிறுவனத்தில் சித்திரமும் வடிவமைப்புமாணி பட்டப் படிப்புக்கான நுழைவுத் தேர்வுக்குரிய இலவச வழிகாட்டல் வகுப்பு நடைபெறுகிறது. இதற்காக விண்ணப்பித்தோர் இந்தப் பயிற்சி வகுப்பில் இணைந்து கொள்ள முடியும் என நிறுவன இயக்குநர் அறிவித்துள்ளார்.

# ஆரம்பப் பிரிவு பரிசளிப்பு விழா

கரவெட்டி —

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் ஆரம்பப் பிரிவு பரிசளிப்பு விழா- எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் ஆரம்பப் பிரிவின் பகுதித் தலைவர் பி.கிருஷ்ண பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தம் கலந்து கொள்ளவுள்ளார்.

இவ்வாண்டில் சிறந்த பரீட்சை பெறுபேறுகள், இணைப் பாடவிதான செயற்பாடுகள் போன்றவற்றில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசு வழங்கலும், மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (12)

### உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில்

# கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

மீசாலை —

உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா, உயர்தேசிய முகாமைத்துவ டிப்ளோமா, தேசிய ஆங்கில டிப்ளோமா, தேசிய வியாபார கற்கை டிப்ளோமா, தேசிய நிதி தொடர்பான டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன.

க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்தவர்கள் இந்தக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும், இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் பெற்று பூர்த்தி செய்து வழங்க முடியும் எனவும் நிறுவன இயக்குநர் ரி.இராஜரட்ணம் தெரிவித்துள்ளார். (25)

# இரண்டு மாடி கட்டடம் அமைப்பு

உடுவில் —

சுவிற்சர்லாந்தில் வாழும் தாவடியை சொந்த இடமாகக் கொண்ட தமிழ்மக்களின் நிதியுதவியுடன், தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் மேல் மாடி மண்டப கட்டட வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

சுவிஸிலிருந்து சேகரித்து அனுப்பப்பட்ட சுமார் 20 லட்சம் ரூபா செலவில் மேல்மாடி மண்டப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளன. இந்த வருட இறுதிக்குள் கட்டடத் திறப்பு விழா நடைபெறவிருப்பதாக கல்லூரி அதிபர் சு.சண்முககுலகுமாரன் தெரிவித்தார். (101)

# வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் —

இலங்கையில் உள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு எதிர்வரும் 11 ஆம் திகதி கொழும்பு கல்வி அமைச்சு அலுவலகத்தில் காலை 9 மணிக்கு கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் 5 ஆம் தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் கொடுப்பனவு, ஆண்டு ஒன்று புதிய கல்வியாண்டுக்கான மாணவர்களை அனுமதித்தல் போன்ற பல்வேறு முக்கிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடவிருப்பதாகத் தெரிய வருகிறது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : க.காயித்திரி

முகவரி : மாகியப்பிட்டி

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..........

முகவரி : ..........

பிறந்த ஆண்டு : ..........

கூப்பனுடன் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


# பரிசில் வழங்கலும் பாராட்டு வைபவமும்

மீசாலை —

மீசாலை கிழக்கு சித்திர வேலாயுதர் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு, சித்திர வேலாயுதர் இந்து மன்றத்தால் தென்மராட்சிப் பகுதியில் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் வெற்றிபெற்றோர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் - கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 7 மணிக்கு ஆலய முன்றலில் செ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தப் பரிசில் வழங்கும் நிகழ்வில் வி.உமைதேவி (மீசாலை கிழக்கு) தங்கப் பதக்கத்தையும், ச.பிரணவன் (அல்லாரை தெற்கு), ம.ஞானகரன் (மீசாலை கிழக்கு) ஆகியோர் ஆறுதல் பரிசில்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தப் பரிசில் வழங்கும் நிகழ்வில் ஆசிரியர் எஸ்.லலீசன் அவர்களுக்கு அவருடைய சமயப் பணியைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (25)




அண்மையில் நெல்லியடி ஹற்றன் நஷனல் வங்கியின் அடகுச் சேவையில் இணைந்துகொண்டவர்களுக்கிடையிலான சீட்டிழுப்பில், தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற வாடிக்கையாளர் ஒருவருக்கு வங்கி முகாமையாளர் என்.கே.சபேஷன் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளைப் பரிசளிப்பதைப் படத்தில் காணலாம்.




# தொடர் மழையால் பாதிக்கப்பட்ட நெற்செய்கையை எப்படி மீண்டும் புத்துயிர் பெறச்செய்வது...



– ஆர்.கே.மேனன் –

அண்மையில் விதைப்பினை மேற்கொண்ட பள்ளக் காணி விவசாயிகள் தற்போது பெய்துவரும் தொடர் மழையினால் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக பல விவசாயிகளுடன் கலந்துரையாடிய போது குறிப்பாக பள்ளக்காணிகளில் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளே இப்பாதிப்புக்குப் பெரிதும் முகம் கொடுத்துவருகின்றனர். இருப்பினும், தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக மேட்டுக் காணிகளுக்கும் வெள்ள அபாயமேற்பட்டுள்ளது. இதன் தாக்கமானது இடத்துக்கிடம் வேறுபடும் நிலை கொண்டது ஏனெனில் குறிப்பிட்ட இடத்தில் உள்ள மண்ணின் நீர் உள்வாங்கும் தன்மையினைக் கொண்டு இப்பாதிப்பானது மாறுபடும்.

தற்போது மழை ஆரம்பித்தபோது உழவினை மேற்கொண்டு 403 என்னும் நெல்விதைகளை பரவலாக அனைத்து விவசாயிகளும் விதைத்தனர். இந்த நெல்லினம் முளைத்து, முளைவிடும் பருவத்தில் முளைகளை மூடுமளவுக்கு மழை பெய்துள்ளது. இதனால், இம் முளைகள் அழுகிச் சேதமுற்று விட்டன. இதனால், பலவிவசாயிகள் மீண்டும் ஒரு விதைப்பினை அண்மையில் மேற்கொண்டுள்ளனர். இவ்விதைப்பினையும் மீண்டும் அழிக்கும் வகையில் அண்மையில் தொடர்ந்து தொடர் மழை பெய்து வருகின்றது. இதனால் இரண் டாவது முறை மேற்கொண்ட விதைப்பிலும் நம்பிக்கை இழந்தவர்களாக இவ்விவசாயிகள் கைவிரிக்கின்றனர். இதனைவிட மழை ஓய்ந்து முளை வந்தாலும் வெள்ளம் ஓடிய "நிலம்" ஆதலால் களைகளின் தொல்லையும் பல செலவீனங்களை உண்டு பண்ணும் என அஞ்சுகின்றனர். வருடத்தில் ஒரு போகத்தினை மாத்திரம் முன்னெடுக்கும் பல விவசாயிகளுக்கு இயற்கையும் இவ்வாறு முரணாக நடந்தால் எப்படி இவர்கள் வாழ்வது என்பதே பலரின் ஏக்கத் தொனியாக உள்ளது.

இப்படிப்பட்ட இன்னல்களில் இருந்து விவசாயிகளை எப்படி மீட்டெடுப்பது என்று சற்றுச் சிந்தித்தோமானால் முன்னைய காலங்களில் விதைப்புக்குச் சற்று முன்னர் மழை ஆரம்பிக்கும்போது நாற்று சற்று வளர்ந்து விடும். இதனால் பாதிப்பு பெருமளவு ஏற்படாது. ஆனால் தற்போது முன் மழை இல்லாத காரணத்தினால் விதைப்பு சற்று பின் தள்ளப்படுகிறது. இதனால் தான் இத்தாக்கம் ஏற்படுகிறது. புழுதி விதைப்பினை மேற்கொண்டு இரண்டு அல்லது மூன்று தடவைகள் இறைப்பினை மேற்க்கொண்டால் இனி வரும் காலங்களில் இப்படிப்பட்ட இடர்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

தற்போது இரண்டாம் தடவை விதைப்பினை மேற்கொண்டவர்கள் கிருமிநாசினிகளை அடித்து களைப்பெருக்கத்தில் இருந்து நிலத்தைப் பாதுகாத்து வந்து சற்று மழை ஓய்ந்து நாற்று ஓரளவு வளர்ந்த பின் இரண்டு விதைப்பின் காரணமாகவும் வெள்ள அழிவினாலும் நாற்றுக்கள் காணிகளில் ஐதாகவும், அடர்த்தியாகவும் காணப்படும். இதனைச் சீர் செய்து அடர்த்தியான இடங்களில் இருந்து நாற்றுக்களைப் பிடுங்கி ஐதான இடங்களுக்கு நடுவதன் ஊடாக விளைச்சலைச் சீர் செய்ய முடியும்.

இதனை விட எமது தற்கால இயற்கையின் மாறுதல்கள் சீரற்று காணப்படுவதால் தான் "மொட்டைக் கறுப்பன்" எனும் இனங்களில் ஆரம்பத்தில் மேற்க்கொள்ளப்பட்ட நெற்செய்கைகள் EXPO, 500-, 403 எனக் குறைந்த கால விளைச்சலை உண்டு பண்ணும் இனங்களாக அறிமுகப் படுத்தப் பட்டது. இது தாமத கால விளைச்சலை உடையது. இவ்இனங்களைத் தெரிவது எமது இயற்கையின் மாறுதல்களுக்கு ஏற்ப அமையும். இதனைவிட இப்படியான இயற்கையின் அபாயச் சூழலில் விளைச்சலைத் தூண்டும் அதாவது விரைவாக வளர்ச்சியினை உண்டு பண்ணும் உர வகைகளை பாவித்தல் சிறந்தது.

ஆகவே இது ஒரு இயற்கையின் சோதனை என நினைத்து மாற்று நடவடிக்கைகளை முன்னெடுப்பதே சிறந்தது. விவசாயிகளாகிய உங்கள் உழைப் பில்தான் குடாநாட்டிற்கான அரிசி இறக்குமதியின் விகிதம் தங்கியுள்ளது.

## இது பற்றிச் சிந்திப்போம்...!

அதிகாரங்கள் கொண்ட பதவிக் கதிரைகள் எமது அந்தஸ்தை நிர்ணயிப்பதற்காகக் கிடைக்கப் பெற்றவையல்ல. ஆளுமை கொண்ட நிர்வகிப்பின் மூலம் நிறுவனத்தினை முன்னேற்றவே ஆகும்.

# போட்டித்திறன் உலகில் வங்கித்தொழில் – ஓர் மதிப்பீட்டாய்வு

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

**வங்கியின் தொழிற்துறை நடவடிக்கைகளும் அவற்றுடன் தொடர்புடைய ஆபத்துகளும்**

ஓர் வங்கியானது - தனது செயற்பாட்டின்போது பல்வேறுபட்ட ஆபத்துகளை எதிர்வுகொள்கின்றது என்றும், அவை எவ்வகையான தன்மையானவை என்பது பற்றியும் சிறிய தலைப்புகளுடன் மதிப்பீடு செய்தோம். இந்த வாரம் வங்கியின் ஆபத்துக்களின் வகைகளையும், அவை எவ்வாறு நிதிக்கூற்றுகளில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதையும் மதிப்பீடு செய்வோம்.

**வங்கி எதிர்நோக்கும் ஆபத்துகளை இரு பிரதான பிரிவுக்குட்படுத்தி நாம் மதிப் பீடு செய்வோம்.**

1. வங்கியின் ஐந்தொகையில் உள்ள சொத்துகள், பொறுப்புகளை மாற்றத்துக்குட்படுத்திய செயற்பாடுகளின் மூலம் வங்கியின் ஐந்தொகையில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும் ஆபத்துகள்.

2. வங்கியின் ஐந்தொகையில் சொத்துகள், பொறுப்புகளில் எந்தவிதமான மாற்றங்களையும் ஏற்படுத்தாமல் வங்கியின் ஐந்தொகையை (Blance Shat) பாதிக்கும் ஆபத்துகள்.

ஓர் வங்கியானது - தனது வாடிக்கையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும்போது அந்த வங்கியின் சொத்துகள், பொறுப்புகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஓர் வங்கியின் நிதிக் கூற்றுகளில் ஒன்றான ஐந்தொகையை (Blance Shat) அது தயாரிக்கும் தினத்தில் வங்கியில் கொடுத்து தீர்க்கப்படவேண்டிய பொறுப்புகளும், அதே திகதியில் வங்கியில் உருவாக்கப்பட்டுள்ள மொத்த சொத்துகளும் ஒன்றுக்கொன்று சமப்படுத்தப்படுகின்றது. வங்கியின் பொறுப்புப் பக்கத்தில் தனது உரிமையாளர்களினால் இடப்பட்ட மூலதனம், பல்வேறுபட்ட மூலங்கள் மூலம் திரட்டிய வாடிக்கையாளர் வைப்புகள், கடன் கொடுநர்கள் மூலம் திரட்டிய கடன் தொகை என்பவற்றையெல்லாம் கொண்டிருக்கும் அதேவேளை - இவ்வாறு பல்வேறுபட்ட நிதி மூலங்கள் மூலம் உருவாக்கப்படும் நிதியானது வங்கியால் தொழிற்துறை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும்போது அது வங்கியின் சொத்துகள் ஆகின்றன.

உதாரணமாக - வங்கியின் நாளாந்த கொடுக்கல் வாங்கல்களின்போது ஈடுபடுத்தப்படும்




- S.வசந்தகுமார் -

பணம், பல்வேறுவகையான வங்கியின் முதலீடுகள், வங்கியால் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் மற்றும் முற்பணம், தவணைக் கட்டண கடன்கள், நிலையான சொத்துகள் என்பன வங்கியின் ஐந்தொகையில் சொத்துகள் பகுதியில் காட்டப்பட்டிருக்கும்.

எனவே, வங்கி பொதுவாகத் தனது வாடிக்கையாளர்களிடமிருந்து நிலையான வைப்பு, சேமிப்பு வைப்பு, கேள்வி வைப்பு எனப் பல்வேறுவகையான வைப்புகளின் மூலம் பணத்தைத் திரட்டுகின்றது. இவ்வாறு திரட்டப்படும் பணத்துக்கு வங்கி உரிய காலப்பகுதியில் வட்டியைச் செலுத்துவதற்கு கடமைப்பட்டுள்ளது. அதேவேளையில் - அந்தப் பணத்தை அந்த வங்கி வீணே பணமாக தனது இரும்புப் பெட்டியில் வைத்திருப்பதன் மூலம் எந்தவிதமான வருமானத்தையும் பெற்றுக்கொள்ளமாட்டாது. அந்தப் பணத்தைப் பல்வேறுபட்ட வருமானம் உழைக்கும் மூலங்களில் ஈடுபடுத்தி, வருமானத்தை உழைக் கும். அவ்வாறு பல்வேறுபட்ட மூலங்களில் தனது வாடிக்கையாளார் வைப்பிலிட்ட பணத்தை ஈடுபடுத்தும்போது அது பல்வேறுபட்ட ஆபத்துகளை எதிர்வு கொள்கிறது.

1. வாடிக்கையாளர் எதிர்பாராத விதமாக வைப்புப் பணத்தை மீளக் கோருகின்றபோது - வங்கி திரவத்தன்மை பிரச்சினையை எதிர்வு கொள்கின்றது. ஏனெனில், வங்கிகள் குறுகிய கால வைப்புகளைப் பெற்று நீண்ட காலக் கடன்கள் மற்றும் முதலீடுகளில் இடும்போது, இத்தகைய திரவத் தன்மை பிரச்சினையை எதிர்வுநோக்குகின்றன. இதனை சொத்துகள், பொறுப் புகளின் முதிர்வுகாலச் சமமின்மை எனக் குறிப்பிடலாம்.

இதனைத் தவிர்ப்பதற்கு வங்கியானது- வேறு நிதி மூலங்களை வங்கி நாடவேண்டி வருகின்றது.

**அடுத்ததாக வங்கி பல்வேறுவகையான வாடிக்கையாளர்களுக்கும் கடன்களை பல்வேறு வகையான முதிர்வு காலங்களில் வழங்கிவருகின்றது. அவ்வாறு கடன்களை வழங்கும்போது -**

1. கடன்களை வழங்கும் நடைமுறைகள் வங்கிக்கு வங்கி வேறுபடுகின்றது.

2. அத்துடன் தனது வாடிக்கையாளர்களின் இயல்புக்கு ஏற்பவும், அவர்களது இயலுமை (Capacity) என்பனவற்றையும் கவனத்தில் கொண்டே இங்கு வங்கியானது - கடனை வழங்க வேண்டிய கடமைப்பாட்டில் உள்ளது. அதேவேளை, கடன்களை வழங்கும் போது அதிகபட்ச நிபந்தனைகளை வங்கி தனது வாடிக்கையாளர்மீது விதிப்பதன்மூலம் வங்கியானது தனது வாடிக்கையாளர்களை இழந்துவிடவும் கூடும்.

எனவே, வங்கி இங்கு அதிகளவு ஆபத்தை எதிர்வுகொள்கின்றது. எந்தவிதமான முன்னெச்சரிக்கையும் இன்றி, கடன் வழங்கினால் வங்கி தனக்குக் கிடைக்கவேண்டிய வட்டி வருமானத்தையும் இழந்து, கடன் தொகை கிடைக் காமையால் வங்கியின் சொத்து தேய்வு அடையவேண்டிய ஆபத்தை எதிர்வு கொள்கிறது. மீளச் செலுத்துவதற்கான திகதியில் இருந்து, 90 நாட்களைத் தாண்டிய கடன், தவணைப் பணமும் வட்டியும் சேர்ந்த நிலுவைத் தொகையே செயலற்ற கடனாக Non Performing Loan மாறுகிறது. இவ்வாறு கடன் தொகையானது செயலற்றதாக மாறும்போது வங்கியின் சொத்து தேய்வடையும். அதேநேரம் இந்தக் கடன் தொடர்பாக ஏற்பாட்டினைச்செய்ய வேண்டிய தேவை எழுகின்றது.

கடனில் இருந்து கிடைக்கவேண்டிய வட்டித் தொகை கிடைக்காமல் விடுவதனால் வருமான இழப்பீடு ஏற்படுகின்ற அதேசமயம், இந்தக் கடனுக்கு ஏற்பாடு செய்யும்போது ஏற்கனவே பல்வேறுபட்ட முலம்களில் இருந்து கிடைத்த இலாபத்தின் ஓர் பகுதியானது, இச் செயலற்ற கடனுக்கான ஏற்பாடாக மாறுவதனால் வங்கியின் இலாபத்தில் பாரியளவு பாதிப்பை இது ஏற்படுத்துகின்றது.

எனவே இதனைத் தவிர்ப்பதற்கு வங்கி தனது கடன் கொள்கையை சிறந்தவகையில் முகாமைசெய்யவேண்டிய தேவையுள்ளது.


அதாவது - நம்பிக்கையான வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்குதல், பொருத்தமான பிணைகளை வாடிக்கையாளர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளுதல், எழுத்திலான கடன் கொள்கை முறையை சிறந்தவகையில் பேணுதல். கடன்களை வழங்கும்போது சிறந்தமுறையில் பகுப்பாய்வு செய்து செயற்திட்ட கடன்களை (Project Loan) வழங்குதல் எல்லாக் கடன்களையும் ஓர் வகையான தொழிற்துறைக்கு வழங்காதிருத்தல், கடன் அளவைப் பொறுத்து மிக விரைவில் திரவத்தன்மையாகக் கூடிய எந்தவிதமான நிபந்தனையையும் கொண்டிராத பிணைகளைக் கொண்டிருத்தல், வங்கியின் பணிப்பாளர்கள், அவர்களுடைய நண்பர்கள், உறவினர்கள், வங்கியின் மேல்மட்ட முகாமைத்துவத்தில் உள்ளோர் உடன் தொடர்புடைய தரப்பினர், அரசியல் செல்வாக்கு உள்ளோர் என்பவர்களுக்கு கடன்களை வழங்கும்போது மிகவும் அவதானமாகவும், ஏற்கனவே உள்ள கடனை வழங்கும்போது பயன்படுத்தும் அனைத்து நிபந்தனைகளும், பொருத்தமான பிணைகளும் உரியமுறையில் பெறப்பட்டுள்ளதா என்பதை மிகவும் தீவிரமாக பரிசீலிக்கவேண்டியது வங்கியிலுள்ள கணக்காய்வுப் பிரிவுக்கு உள்ள முக்கிய பொறுப்பாக மாறுகின்றது.

அந்தவகையில் மேற்கூறப்பட்ட வகையில் முகாமை செய்வதன்மூலம் கடன் வழங்குதல் மூலம் வங்கி எதிர்நோக்கும் ஆபத்தானது சிறந்தவகையில் முகாமை செய்யப்படும். (தொடரும்...)



# தும்பு தயாரித்தல்

**அறிமுகம்:-** தென்னை அதிகமாக வளரும் கடற்கரைப் பிரதேசம் இத்தொழிலுக்கு வாய்ப்பானதாகும். இது எமது யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கு மிகவும் பொருத்தமான தொழில். தென்னையிலிருந்து கழிக்கப்பட்ட பொருட்களே இந்த உற்பத்திக்கு மூலப் பொருட்களாகப் பயன்படுவதால் மூலப் பொருள் கொள்வனவுப் பெறுமதி குறைவு. தேங்காய் மட்டையை நீரில் ஊறவைத்தே தும்பு அடிக்க வேண்டுமாகையால், நீர் நிலைகளை அண்டிய பிரதேசங்களை இத்தொழிற்குரிய இடத்தெரிவாகத் தேர்ந்தெடுப்பது சிறந்தது. கிராமப்புறங்களில் சிறியோர் முதல் முதியோர் வரை இத்தொழிலில் ஈடுபடுவர். இதனை ஓர் உபதொழிலாகவும் மேற்கொள்ளலாம்.



**சந்தை வாய்ப்பு:-** எமது சமூகத்தில் ஏராளமான தேங்காய் மட்டைகள் எரிக்கப்பட்டும், கழிவுப் பொருட்களாக உக்கியும் போகின்றன. ஆனால், எம்மவர் மத்தியில் இக்கைத்தொழில் பெரிதாக இன்னும் பரம்பலடையவில்லை.

இதனால், யாழ். குடாநாட்டுக்குத் தேவையான தும்புக் கயிறுகள் பெரும்பாலும் பிற இடங்களிலிருந்து தான் இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனால் பொருளின் பெறுமதிச் செலவு அதிகமாகின்றது.

ஆனால், எமது உற்பத்தியில் விற்பனை செய்யும்போது ஏற்றுமதி, இறக்குமதிச் செலவுகளில் சற்றுக் கழிவினை ஏற்படுத்தி விற்றோமானால் சந்தை வாய்ப்பு அதிகமுண்டாகும்.

**தொழில்நுட்பம்:-** தொழில்நுட்பம் மிக இலகுவானது. சொற்ப நாள் பயிற்சியுடன் இத்தொழிலினை ஆரம்பிக்கலாம். கிராமப்புறங்களில் மரபுவழித் தொழிலாக இதனை நடைமுறைப்படுத்துகின்றனர்.

இதனால் பயிற்சியும், ஆர்வமும் சிறு வயதில் இருந்தே முனைப்புப் பெறும் வாய்ப்பு உண்டாகும். பிராந்திய கைத்தொழில் அபிவிருத்திச்சபை, சிறு கைத்தொழில் திணைக்கள அலுவலகங்கள் மூலம் வேண்டிய தொழில்நுட்பப் பயிற்சியைப் பெறலாம்.

**மூலப் பொருட்கள்** - தேங்காய் மட்டையிலிருந்து பெறப்படும் தும்பு

**உபகரணங்கள்** - கயிறு திரிக்கும் பொறி, அலுமாரித்தட்டு, தட்டுப் பொல்லு

**முதலீடு :-** ரூபா 5,000

**மாத வருமானம்:-** ரூபா 3,000

**குறிப்பு:-** காணி கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அவ்வப் பிரதேசத்தில் கிடைக்கும் தேங்காய் மட்டையைப் பயன்படுத்தி அல்லது பிற இடங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மட்டைகளைப் பயன்படுத்தி, அம்மட்டைகளை இரண்டு கிழமைகள் நீரில் ஊறவைத்து எடுக்க வேண்டும் என்பதனால் நீர் நிலைகளை அண்டிய பகுதிகள் அல்லது தொட்டிகள் அவசியமாகும்.

எடுக்கப்படும் தும்புகளின் தரத்திற்கமைய கயிறுகளின் தரமும் விலையும் அமையும் என்பதால் தரமான தும்பு பெறுவது அவசியம்.

# "வங்கித்துறையில் தமிழீழ வைப்பகத்தின் பங்கு"

**வங்கி அறிமுகம்** ( Introduction to Bank)

இலங்கையின் வர்த்தக வங்கிகளின் வரலாறானது 1841ஆம் ஆண்டு லண்டன் வர்த்தகர் ஒருவரினால் கொழும்பில் உருவாக்கப்பட்ட இலங்கை வங்கியுடன் ஆரம்பமானது. இந்த வங்கியானது -கண்டியில் ஒரு கிளையைக் கொண்டிருந்து செயற்பட்டு வந்தது. ஆனாலும் நான்கு வருடங்களின் பின்னர் செயலிழந்தது. பின்னர் மலைநாட்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கோப்பி உற்பத்திக்கு உதவுவதற்கு அவசியமான வர்த்தக வங்கிகளின் தேவையினை உணர்ந்த பிரிட்டிஷ் அரசாங்கம் கொழும்பு மற்றும் கண்டி பிரதேசங்களில் வெளிநாட்டு வங்கிகளின் கிளைகளை நிறுவியது. அவையாவன -




1. Oriental Bank
2. Royal Bank of India (1866)
3. Mercantile Bank of India Ltd (1854)
4. Imperial Bank of India (1867)
5. National Bank of India (1881)
6. Hongkong and Shanghai Banking Corporation(1892)
7. Charted Bank of India, Australia and China(1892)
8. Eastern Bank Limited (1892)
9. P and O Banking Corporation (1992)
10. The State Mortgage Bank (1931)

வங்கிகளானது - நிதி மிகையினைக் கொண்டிருப்போரையும், நிதி தேவைப்படுவோரையும் தொடர்புபடுத்தும் ஒரு நிதி இடைத்தரகராகத் (Financial Intermediaries) தொழிற்படுகின்றது. இலங்கையில் வங்கிகள் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வேண்டியது கட்டாயமானதும், சட்ட நியதியானதுமாகும். இலங்கையில் இயங்கும் எல்லா வங்கிகளின் செயற்பாட்டுத்திறனைக் கண்காணிப்பதில் இலங்கை மத்தியவங்கி முக்கிய பங்கு வகிக்கிறது. இதனால் இலங்கை மத்தியவங்கியானது- "வங்கிகளின் வங்கி" எனவும் அழைக்கப்படுகின்றது. இலங்கையில் பிற நாடுகளுக்குச் சொந்தமான வங்கிகள் தமது கிளைகளை நிறுவி தொழிற்பட அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**தமிழீழ வைப்பகம் (Bank of Tamileelam)**

தமிழீழ வைப்பகமானது-

1994ஆம் ஆண்டு வைகாசி மாதம் 23ஆம் திகதி "தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்" என்னும் தொலை நோக்கினை (Vision) அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. தமிழ் பிரதேசங்களில் பல வங்கிகள் தொழில்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு சூழலில், தமிழீழ வைப்பகமானது பின்வரும் பிரதான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

**1. தமிழர்களைப் பிரதிநிதிப்படுத்துதல்**

தமிழர்களைத் தமிழ் பிரதேசத்தில் முற்று முழுதாகப் பிரதிநிதிப்படுத்தும் வங்கியாகத் தமிழீழ வைப்பகம் உருவாக்கப்படல்.

**2. தமிழர் தாயகப் பிரதேசங்களில் உருவாக்கப்படும் சேமிப்புக்களை அப்பிரதேச முதலீடுகள், அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல்.**

தமிழர் தாயகப் பிரதேசங்களில் வைப்பாளர்களிடமிருந்து ஏனைய வங்கிகளால் திரட்டப்படும் வைப்பு நிதியானது - முற்று முழுதாகத் தமிழர் பிரதேசங்களில் முதலீடு, அபிவிருத்தித்திட்டங்களில் ஈடுபடுத்தப்படுகின்றதா என்றால், அது கேள்விக் குறியாகவே காணப்படுகிறது. எனவே, நீண்டகாலமாக உள்நாட்டு யுத்தத்தினால் சிதைவடைந்து போயுள்ள தமிழர் தாயகப் பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்பப் பாரிய முதலீடு, அபிவிருத்தித்திட்டங்களினை மேற்கொள்வது அவசியமாகும். இதற்குத் தேவையான நிதித் தேவைப்பாடுகளை வழங்குதல்

**3. போதிய-சிறந்த கடன் திட்டங்களை அமுல்படுத்துதல்**

இலங்கை அரச, தனியார் வங்கிகள் தமிழர் பிரதேசத்தில் செயற்பட்டபோதும், அவை தமிழ் மக்களுக்கான சிறந்த கடன் திட்டங்களைக் கொண்டிருக்கவில்லை. பலமுறை அந்தவங்கி அதிகாரிகளை, தென் பகுதியில் இந்த வங்கிகளினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கடன் திட்டங்களை வடக்கு-கிழக்கு பகுதிகளில் அமுல்படுத்துமாறு மக்களால் கேட்டுக் கொண்ட போதும் அதற்கு அவர்கள் உள்நாட்டு யுத்தத்தைக் காரணம் காட்டி அத்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாது எனக் கூறிவிட்டனர். இந்த நிலையில் தமிழர் பிரதேச மக்களின் வாழ்வை உயர்வடையக் கூடியதான மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதான சிறந்த கடன் திட்டங்களை வழங்குதல்.

**4. தேசத்தின் அபிவிருத்தி மற்றும் பொருண்மியத்தை வளப்படுத்தல்**

ஏனைய வங்கிகள், நிதி நிறுவனங்களின் செயற்பாட்டில் தங்கியிராது தமிழீழ வைப்பத்தினூடாக சிறந்த முதலீட்டு, வைப்பு, அபிவிருத்தித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி எமது தேசத்தைக் கட்டியெழுப்பும் சிந்தனை.

தென்பகுதியை மையமாகவும், தமிழர் தாயகப் பிரதேசங்களில் கிளைகளைக் கொண்டு இயங்கும் வங்கிகளானது - தென்பகுதியில் நடைமுறைப்படுத்துகின்ற முதலீட்டுத் திட்டங்களைப் போர்ச் சூழலைக் காரணம் காட்டி, தமிழர் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தாமை இங்கு குறிப்பிடத்தக்கது.


**தமிழீழ வைப்பகத்தின் முகாமைத்துவக் கட்டமைப்பு**

**(Chart of Management of Bank of Tamileelam)**

தாயகத்தின் தனித்துவம் பெற்ற வைப்பகமாகவும், மக்களின் நம்பிக்கையின் சின்னமாகவும், வழமைதாரரின் காவலனாகவும், பொருண்மிய மேம்பாட்டின் பங்காளனாகவும், தன்னைத் தாயகத்தில் மட்டுமன்றி தாயகத்திற்கு வெளியேயும் வெளிப்படுத்தி நிற்கும் வைப்பகப் பணியில் மக்களனைவரையும் தன்னுடனிணைத்தல்.

மேற்கூறிய வாசகங்களை குறிக்கோளாகக் (mission) கொண்டு செயற்படும் தமிழீழ வைப்பகமானது பின்வரும் சிறந்த முகாமைத்துவக் கட்டமைப்பினைக் கொண்டிருக்கின்றது.

முகாமைத்துவ அட்டவனை




பூ. ஜெகதீஸ்வரன்
வணிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

(தொடரும்...)

# முகாமைத்துவம்

முகாமைத்துவமானது இன்று எல்லாத் துறைகளிலும் வேண்டப்படும் ஒரு கருமமாகும். அதன் காரணமாகவே மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் போல் வளர்ந்து வரும் துறையாக முகாமைத்துவத் துறையும் மாறிவருகின்றது. மனிதனுக்கு எந்தத் துறையின் வளர்ச்சி அவசியம் எனக் கருதப்படுகின்றதோ அந்தத் துறையை வேகமாக வளர்க்க வேண்டிய அவசியம் உண்டு. இதன் காரணமாகவே. முகாமைத்துவத் துறையில் அவசியம் வேண்டப்படுகின்ற ஒரு கருமமாக அமைந்திருப்பதனால் அதன் வளர்ச்சிவேகம் உயர்வாக காணப்படுகிறது மேலைத்தேய முகாமைத்துவ கொள்கைகளும், ஜப்பானிய முகாமைத்துவ கொள்கைகளும் தனித் தனியே வளர்ச்சியடைந்து வருகின்றன. இதன் காரணமாகவே முகாமைத்துவம் சம்பந்தமான பல நூல்கள் வெளிவருவதுடன், அதற்கெனப் பல வரைவிலக்கணங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அந்த வகையிலே முகாமைத்துவத்துக்கு ஐந்து வரைவிலக்கணங்கள் ஏற்புடையதாகக் கொள்ளப்படும்.

1. Mary Parker Follett... என்பவரே முகாமைக்கான முதலாவது வரைவிலக்கணத்தைக் கொடுத்தவர். இவ்ரின் கருத்தின்படி ஊழியர்களைக் கொண்டு கருமங்களை ஆற்றுவிப்பது தொடர்பான செயற்பாடே முகாமைத்துவமெனக் கூறப்படுகிறது. இங்கு முகாமையின் நோக்கமெல்லாம் நிறுவனத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் ஊழியரிடம் இருந்து எதிர்பார்த்த கடமையை நிறைவேற்றுவது. இதனால், ஒவ்வொரு ஊழியர்களுக்கும் என ஒதுக்கப்பட்ட வேலையை நிறைவேற்றி கொடுக்கும் பொறுப்புடைய கருமமாக முகாமைத்துவம் கொள்ளப்படுகின்றது.

2. E.F.L Breach என்பவர் முகாமைக்கான அடுத்த வரைவிலக்கணத்தை வழங்கியுள்ளார். இவர் ஒவ்வொரு நிறுவனமும் ஏதோ ஒரு நோக்கத்தை (Objective) கொண்டு இயங்கிவரும் எனவும் அந்நோக்கத்தை அடைவதற்கு அவை தமக்குக் கிடைக்கும் வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்த முற்படும் நிறுவனத்தின் வளங்களே பௌதீக வளம் (Physical Resource) மனித வளம் (Humann Resource) என இரண்டாக வகுக்கலாம். பௌதீக வளங்கள், காணி, கட்டடம், இயந்திரம் போன்றவற்றை உள்ளடக்குமாயின், மனிதவளம் ஊழியரைக் குறித்து நிற்கும். இந்த வளங்கள் வரையறுக்கப்பட்டவை இவற்றில் இருந்து உச்சப் பயனைப் பெற்று, நிறுவனத்தின் நோக்கத்தை அடைய வைக்கும் கருமமே முகாமைத்துவம் என Breach கூறுகிறார். இந்த வகையில் முகாமையினர் திட்டமிடல் (Planning) ஒருங்கிணைத்தல் (Co - ordination) ஊக்கப்படுத்தல் (Motivation) கட்டுப்படுத்தல் (Control) எனும் நான்கு கருமங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும் என Breach கூறுகின்றார்.

3. Koontz and ordonnel ஆகிய இருவரும் முகாமைக்கான மூன்றாவது வரைவிலக்கணத்தை வழங்கியுள்ளனர். இதன்படி நிறுவனமொன்றில் நோக்கினை அடைவதற்கு மேற்கொள்ளப்படும் கருமமே முகாமைத்துவம் என்பதாக கூறப்படுகிறது. இதற்கமைய -

1. திட்டமிடல் (Planning)
2. ஒருங்கமைத்தல் (Organising)



3. ஊழியரிடல் (Staffing)
4. நெறிப்படுத்தல் (Directing)
5. கட்டுப்படுத்தல் (Controlling)


ஆகிய 5 முகாமைக் கருமங்களை உள்ளடக்கிய செயற்பாடே முகாமைத்துவம் என இவர்களால் வரையறுக்கப்பட்டுள்ளது.

4. Peterson and Plowman ஆகிய இருவராலும் முகாமைக்கான நான்காவது வரைவிலக்கணம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களின் கருத்துப்படி ஊழியரின் நோக்கத்தை அடைந்து கொள்வதன் ஊடாக நிறுவனத்தின் நோக்கத்தை அடைந்துகொள்ள வகைசெய்யும் ஒரு கருமமே முகாமைத்துவம் எனக் கூறப்படுகிறது. இதன் படி ஊழியருக்கான நலன்களைப் பெற்று கொடுப்பதுடன், நிறுவனத்தின் நோக்கமான உச்ச இலாபத்தை அடைய வைப்பதும் முகாமையின் பொறுப்பாகும். இரு நோக்கமும் முரண்பட்டவை என்பதனால் அவற்றை இணங்க வைப்பதும் முகாமையின் பிரதான கடமை எனக் கூறப்படுகிறது.

5. Peterdrucker என்பவர் முகாமைக்கான ஐந்தாவது வரைவிலக்கணத்தை வழங்கியுள்ளார். இவரின் கருத்துப்படி நிறுவனத்தின் இலக்கினை அடைவதற்காக உதவும் ஒரு கருமமே முகாமைத்துவம் ஆகும். இதன் அடிப்படையில் -

i. திட்டமிடல் (Planning)
ii. ஒழுங்கமைத்தல் (Organizing)
iii. வழிநடத்தல் (Direction)
iv. கட்டுப்படுத்தல் (Controlling)

ஆகிய நான்கு தொழிற்பாடுகளையும் எந்தவொரு கருமம் நிறைவேற்றுமோ அது முகாமைத்துவமாக அமையமுடியும் எனக் கூறப்படுகின்றது. இதற்கென Peter Drucker இனால் பின்வருமாறு படம் விதத்துரைக்கப்பட்டுள்ளது.




மேற்கூறிய எல்லா வகையான வரைவலக்கணங்களையும் தொகுத்து நோக்கினால், முகாமைக்கு இறுதி முடிவு ஒன்று கூறமுடியும். அதாவது வரையறுக்கப்பட்டிருக்கும் பௌதீக வளங்களையும் மனிதவளங்களையும் பயன்படுத்தி நிறுவனங்கள் தமது நோக்கத்தினை அடைந்து கொள்ளவகை செய்யும் கருமம் எதுவோ அதுவே முகாமையென வரையறுக்கலாம்.

- வெண்கட்டியான் -

# தேசியத் தலைவரின் வழிநடத்தலினாலேயே தமிழர்களாகிய நாம் தலைநிமிர்ந்து நிற்கிறோம்

## - மட்டக்களப்பு மாவட்ட கல்விக்கழக துணைப் பொறுப்பாளர் தாயகன் -

மட்டக்களப்பு

தேசியத் தலைவரின் வழி நடத்தலினால் தமிழர்களாகிய நாம் தலை நிமிர்ந்து நிற்கின்றோம் என தமிழீழ கல்விக் கழகத்தின் மட்டக்களப்பு மாவட்ட துணைப் பொறுப்பாளர் தாயகன் தெரிவித்தார். மட்டக்களப்பு, பழுகாமம், கண்டுமணி மகாவித்தியாலயத்திற்கான தண்ணீர் தாங்கி வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போர் நிறுத்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்றரை வருடம் கடந்து விட்ட போதிலும் கூட பலனேதுமளிக்காது ஆபத்தான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது.

தமிழ் மக்களின் மீது இலங்கை புலனாய்வுப் பிரிவினரும், தேசவிரோதக் கும்பல்களும் நிழல் யுத்தத்தைத் தொடுத்துக் கொண்டு வருகின்றனர். இது வெகு விரைவில் நிஜயுத்தமாகிவிடும்.

இதற்கிடையில் அரசு தேர்தல் களத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இந்தக் காலத்தில் தமிழர்களாகிய நாம் சிந்தித்து செயலாற்ற வேண்டும். தேசியத் தலைவரின் வழி நடத்தலிலேயே தமிழர்களாகிய நாம் தலைநிமிர்ந்து நிற்கிறோம்.

தேர்தலுக்குப் பின் நிகழப் போகும் சம்பவங்களை மக்கள் எதிர்பார்த்த நிலையிலும், எதிர் வரும் 27ஆம் திகதி எமது தேசியத் தலைவரின் உரையை எதிர்பார்த்து சர்வதேச சமூகத்தினரும் இருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

பட்டிருப்பு வலயத்தினுள்ள முதன்மைப் பாடசாலைகளுள் பழுகாமம், கண்டுமணி மகாவித்தியாலயமும் ஒன்று. இந்தப் பாடசாலையில் பல்வேறு நிகழ்வுகள் மக்களால் ஏற்படுத்தப்பட்டாலும் அவை ஒவ்வொன்றும் கல்வியை மேம்படுத்துவதாக அமைந்திருக்கின்றன எனவும் அவர் கூறினார்.

# திட்டமிடல் மேம்பாட்டுக்கான மாவட்டச் செயலகம் திறந்துவைப்பு

## - அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் -



மன்னார்

மக்களின் தேவைகளை இனம் கண்டு மிக விரைவாக நிறைவேற்றுவதற்காகவும், தாயக திட்டமிடலுக்காகவும், மேம் பாட்டுக்குமாகவே இந்தச் செயலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது என அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

இந்தச் செயலகம் மன்னாரில் திறந்து வைக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது -

எமது மக்களின் தேவைகளை இனம் கண்டு, அது திட்டமாக வகுக்கப்பட்டு அவற்றை மிக விரைவாகவும், இலகுவாகவும் மாவட்டச் செயலகம் ஊடாக செயற்படுத்துவதற்கான, அபிவிருத்திக்கான நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் செயலகத்திற்கான பெயர்ப்பலகையை மன்னார் மாவட்ட அரச அதிபர் விஸ்வலிங்கம் திரை நீக்கம் செய்து வைத்தார்.

மாவட்ட செயலகக் கட்டடத்தை சிரான் பிரதிப்பணிப்பாளர் செல்வின் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் திட்டமிடல், மேம்பாட்டுக்கான செயலகப் பணிப்பாளர் ரஞ்சன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் விஸ்வலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

## வவுனியா பிரதேசத்தில்

# குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்கு நடவழிக்கை எடுக்க நீதிவான் உத்தரவு!

வவுனியா

வவுனியா பகுதிகளில் கடந்த ஒரு மாத காலமாக அதிகரித்துள்ள குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக வவுனியா பிரதேச குற்றத்தடுப்பு பிரிவுக்குப் பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் தர்மசிறி, வவுனியா தலைமையக இன்ஸ்பெக்டர் அபேசிங்க பண்டார, குற்றத்தடுப்பு பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி ஜயசிங்க ஆகியோரை தனித்தனியே சந்தித்த வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் குற்றச்செயல்களைக் குறிப்பாக வாகனக் கடத்தல்களைத் தடுத்து நிறுவத்துவதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஒரு மாத காலத்தில் மாத்திரம் 11 மோட்டார் சைக்கிள்கள், 2 வான்கள், 2 ஓட்டோக்கள் என்பன கடத்தப்பட்டுள்ளன. வவுனியா நகரத்தின் மையப் பகுதியிலிருந்து ஒரு மோட்டார் சைக்கிளும், 2 வான்களும் துணிகரமாகக் கடத்திச் செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான முறைப்பாடுகளையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏற்கனவே கடத்தப்பட்ட 7 மோட்டார் சைக்கிள்களும் ஒரு ஓட்டோ வண்டியும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்குள் கொண்டு செல்லப்பட்டு, விற்பனை செய்யப்பட்டுள்ளதாக இந்த விசாரணைகளின் மூலம் தெரியவந்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவத்தின் கட்டுப்பாடற்ற பகுதிக்குள் கடத்தப்படுகின்ற வாகனங்கள் கொண்டு செல்லப்படுவதைத் தடுப்பதற்காக ஓமந்தை, உயிலங்குளம் பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதையடுத்து, முருங்கன் அரிப்பு பிரதேசத்தின் ஊடாக கடத்தல் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாக பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதையடுத்து, பொலிஸ் உயரதிகாரிகளுக்கு இது பற்றி தெரிவித்துள்ள வவுனியா மாவட்ட நீதிபதி - இவற்றைத் தடுப்பதற்கு உரிய அதிகாரிகள் மூலம் நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# வவுனியா மாவட்டத்தில் சேனைப் பயிர்ச்செய்கை

வவுனியா மாவட்டத்தில் பெரும்போகப் பயிர்ச்செய்கை இடம்பெற்று வருகின்ற நிலையில் சேனைப் பயிர்ச்செய்கையும் இடம்பெற்று வருகின்றது.

இந்தப் பயிர்ச்செய்கை வவுனியா, கல்மடு பிரதேசத்தில் செய்கை இடம்பெறுகிற்து. யுத்தம் காரணமாக பல ஆண்டு காலமாக இராணுவ கட்டுப்பாட்டிலிருந்த இந்தப் பிரதேசத்தில் மீளக்குடியேறிய மக்கள் இந்தப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

நெற்செய்கைக்கான பசளை, மருந்து வகைகளின் விலை அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து நெற்செய்கை மூலம் இலாபம் அடையமுடியாத சூழல் இருப்பதால் இவ்வாறான பயிர்ச்செய்கை மூலம் உழுந்து, பயறு, கௌபி போன்ற பயிர்களை பயிரிட உள்ளதாகவும், இதனால் கூடுதலான இலாபம் கிடைக்கும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை - வவுனியா விவசாயிகள் தற்போது இவ்வாறான பயிர்ச்செய்கையில் ஆர்வம் கொண்டுள்ளமை பல இடங்களிலும் தற்போது காணக்கூடியதாக உள்ளது. தற்போது பரவலாக மழை பெய்து வருவதால் சேனைப் பயிர்ச்செய்கை மூலம் விவசாயிகளின் பொருளாதாரம் மேன்மையடையும் என்றும் இந்தப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### நவம்பர் - 10

1793: மன்னராட்சியை எதிர்த்ததுடன், 1792 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் நடந்த படுகொலையை வன்மையாகக் கண்டித்ததன் காரணமாக மரண தண்டனை விதிக்கப்பட்டவரான பிரான்ஸியப் புரட்சி வீராங்கனையான ஃபிலிப்பான் மேனன் ஷான் பாலா பிளாட்டியர் ரோலண்ட் 'ஓ சுதந்திரமே உனது பெயரால் என்னென்ன குற்றங்கள் நடைபெறுகின்றன' என்று முழக்கமிட்டபடி மரணத்தைத் தழுவினார்.

1849: விபத்துக் காப்புறுதி முதன்முதலாக பிரித்தானியாவில் ரெயில்வே பசெஞ்சர் அஸ்ஸுரன்ஸ் கம்பனி என்ற நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது.

1885: ஜேர்மனியில் காட்டிலிப் டெயிம்ளரால் முதன்முதலாக வடிவமைக்கப்பட்ட உந்துருளியை அவரது மகன் பால் டெயிம்ளர் ஓட்டிக் காட்டினார்.

1918: பெல்ஜியம் அரசு தனது நாட்டிலிருந்த எதிரி நாட்டவர்களது சொத்துக்கள் அனைத்தையும் பறிமுதல் செய்தது.

☆: மாலை ஆறு மணிக்குப் பின்னர் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் ஒப்பமிடும்படி, போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைக்குச் சென்றிருந்த தனது நாட்டுப் பிரதிநிதிகளுக்கு ஜேர்மன் அதிபர் வானொலிச் செய்தியை அனுப்பிவைத்தார். ஜேர்மனியின் புரட்சிகரமான மாற்றத்தை வரவேற்று அனைவரும் அதற்கு ஆதரவு தர வேண்டும் என உலக நாடுகளை லெனின் கேட்டுக் கொண்டார்.

1919: பிரிட்டனில் ஹவுன்ஸ்லோவிற்கும் பாரிஸிற்கும் இடையே முதன்முதலாக விமானத் தபால் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது.

1931: அணுக்கரு கட்டமைப்பு பற்றி கண்டுபிடித்துள்ளதாக அமெரிக்க விஞ்ஞானிகளால் அறிவிக்கப்பட்டது.

1944: அல்பேனியா அரசின் தலைவராக, கிளர்ச்சியாளர்களின் தலைவர் ஹோக்ஸகாவை நேச நாடுகள் அங்கீகரித்தன.

1951: மத்திய கிழக்குப் பகுதி நாடுகளை எதிரி நாடுகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதற்கென பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, துருக்கி ஆகிய நாடுகள் கூட்டுப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை அறிவித்தன. அத்துடன் இஸ்ரேல் மற்றும் அரபு நாடுகளது உள்விவகாரங்களில் தாம் தலையிடப்போவதில்லை எனவும் அறிவித்தன .

1964: அவுஸ்ரேலியா கட்டாய இராணுவப் பயிற்சித் திட்டத்தை அமுல்படுத்தியது.

1967: அமெரிக்கா இந்த மாதம் 7ஆம் திகதி ஏவிய சர்வேயர் -6 என்ற விண்கலம் நிலாவில் சைனஸ் மெடி என்னுமிடத்தில் இறங்கியது. இது டிசம்பர் 17ஆம் திகதிவரை பூமிக்கு தகவல்களை அனுப்பிவந்தது.

1970: லூனா கோட் - 1 என்ற தானியங்கி சந்திரகலத்தை ஏந்தியபடி லூனா - 17 என்ற விண்கலம் ரஷ்யாவால் ஏவப்பட்டது.

1971: உலகிலேயே மிக நீளமான சுரங்கப்பாதை அமைப்பதற்கான வேலைகள் ஜப்பானில் செய்கான் என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

1975: போர்த்துக்கேயப் படைகள் அங்கோலாவிலிருந்து முற்றாக வெளியேறின.

1993: காஸாவிலுள்ள யூதக் குடியிருப்புக்கு வெளியே தங்களது படைகளைக் குறைத்துக் கொள்ள இஸ்ரேல் ஒத்துக் கொண்டது.

2002: மொனாக்கோ தேசிய தினம்.

☆ : உலக சமாதான தினம்.

தொகுப்பு :- சந்துரு

# வவுனியாவில் தற்போது கெடுபிடிகள் அதிகரிப்பு!


வவுனியா

வவுனியாவில் பல்வேறு இடங்களிலும் சோதனை நிலையங்கள் தற்போது படையினரால் அமைக்கப்பட்டு, தமிழ் மக்கள் மீதான சோதனைக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஒவ்வொருவரையும் படையினர் துருவித்துருவி விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் தமிழ் மக்கள் மத்தியில் பீதியும், அச்சமும் ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி இடம்பெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலைக் காரணம் காட்டி இவ்வாறான சோதனைகளை படையினர் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

படையினருடன், பொலிஸாரும், இணைந்தே சோதனை செய்ய வேண்டும் என்று படைத்தரப்புக்கு உத்தரவு போடப்பட்டிருந்த போதிலும் பொலிஸார் இன்றியே சோதனை நடவடிக்கைகளில் படையினர் ஈடுபடுகின்றனர். இதேவேளை - சோதனை என்ற பெயரில் தமிழ்ப் பெண்களுடன் கீழ்த்தரமாக நடக்கும் இராணுவத்தினர், சிங்களத்தில் தேவையற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியும் வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

# தொடர் மழையால் வீதிகள் வெள்ளத்தில்!



வன்னி

வன்னிப் பெருநிலப்பரப்பில் அண்மை நாட்களாகத் தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால், போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மக்கள் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

தொடர் மழையால் பரந்தன், முல்லைத்தீவு பிரதான வீதி, ஏழாம் கட்டை, புளியம்பொக்கணை சந்தியில் இருந்து வட்டக்கச்சி செல்லும் பிரதான வீதி என்பன வெள்ளத்தில் மூழ்கியிருப்பதைப் படங்களில் காணலாம்.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

வளையும் முதுகு பாரத்தைச் சுமக்கும். வளையும் மனம் எதிரியையும் சுமந்து போகும்.

- மாண்டெயின்

## நமது நோக்கு

# விடைதேடும் வினாக்கள்

கடந்த சில நாட்களாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காகப் பிரசாரம் செய்துவருகின்ற அவரது வலது கையும், பொருளாதார ஆலோசகரும், கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவருமான மிலிந்த மொறகொடவும், மற்றொரு முக்கியஸ்தரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நவீன் திஸநாயக்காவும் கூறிவரும் செய்திகள் சிறுபான்மையினரை - அதாவது, தமிழ் பேசும் மக்களை சமாதான நடவடிக்கை என்ற பெயரில் எப்படியெல்லாம் ஏமாற்றியுள்ளார்கள் என்பதை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

விடுதலைப்புலிகளுடன் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை அமைதி வழிகள் மூலம் எட்டுவதற்கான நடவடிக்கைகள் என்று - பெருமெடுப்பில் தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் பிரசாரம் செய்துகொண்டு, தாம் பிரதமராக பதவியேற்ற 2002 ஆம் ஆண்டில் மக்களிடையே சமாதானத் தேவனாகப் பவனிவந்த ரணில் விக்கிரமசிங்க அவர்கள், உண்மையில் எந்த நோக்கத்துடன் அந்த முயற்சிகளை மேற்கொண்டார் என்பது அவரது ஆட்கள் வாயிலாகவே வெளிவந்துள்ள நிலையில், இனிமேலும் சமாதானம் என்ற சொல்லை அவர் பயன்படுத்தும் தகைமையற்றவராகியுள்ளார்.

எப்படித்தான் அவர் சமாதானம் குறித்துப் பேசினாலும், அவரைத் தொடர்ந்து, அவரை நம்பி அந்த முயற்சிகளில் தமிழர் தரப்பு இறங்குமா என்பதும் சந்தேகமேயாகும்.

விடுதலைப்புலிகளை, சமாதானப் பேச்சுவார்த்தைக் காலத்தைப் பயன்படுத்தி பலவீனமாக்குவதில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றுள்ளார் என ஐ.தே.கட்சியினர் சிங்கள மக்கள் மத்தியில் தம்பட்டமடிப்பதை பார்க்கும் போது - தமிழ் மக்களும், அவர்களின் தலைமையும் 'இளித்தவாயர்கள்' எனவும், அதனால் தான் ரணிலின் சமாதான நகர்வை நம்பி பலவீனமாகி ஏமாந்து போயுள்ளார்கள் என்றும் அவர்கள் நம்புவதாகவே தெரிகிறது.

இந்த வகையில் பார்த்தால், ரணிலின் சமாதான வேடத்தால் புலிகளோ, தமிழரோ ஏமாறவில்லை என்பதை - புலிகள் ஒரு கட்டத்தில் பேச்சுக்களிலிருந்து தமமை விலக்கிக் கொண்டதன் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

ஆனால், ரணிலால் உண்மையில் ஏமாற்றப்பட்டவர்கள், அவரின் பேச்சை நம்பி இங்குவந்து இன்றுவரையும் கூட ஒஸ்லோ - கொழும்பு - வாஷிங்டன் - டெல்கி - ரோக்கியோ - தாய்லாந்து - ஜேர்மன்... என ஓய்வின்றி அலைந்து சமாதான முயற்சிகளில் தளரா உறுதியோடும், நம்பிக்கையோடும், பேரினவாத சக்திகளின் வசவுகள், விமர்சனங்கள், அவமதிப்புக்கள் அனைத்தையும் தாங்கிக்கொண்டு, தொடர்ந்து அனுசரணையாளர்களாக செயற்பட்டுவருகின்ற நோர்வே அரசின் தூதுவர்களும், அவர்களுக்கு ஆதரவை வழங்கிவரும் சர்வதேச சமூகமும்தான்.

கருணா குழு குறித்தும், அதனால் சமாதானத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்தும் அவர்களைப் பாதுகாத்து, போஷித்து, அவர்களுக்கு வேண்டிய ஆயுத உதவிகளை அளித்து, இன்றைய நெருக்கடி நிலைக்குக் காரணமாகியவர்கள் தென்பகுதி ஆட்சித் தலைமைகள் தான் என தமிழர் தரப்பு கூறியபோதெல்லாம், அரச தரப்பு அதனை மறுத்த போது அரசின் பேச்சை மட்டும் நம்பி ,செயலற்று காலம் கடத்திய நோர்வே அனுசரணையாளர்கள் இனிமேல் இது குறித்து என்ன சொல்லப் போகிறார்கள்?

இனிமேலும், ஆத்ம சுத்தியற்ற - கபட நோக்கமுடைய சிங்கள ஆட்சித் தலைவர்களை நம்பி அவர்களுடன் தமிழர் தரப்பைத் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடச் சொல்லப்போகிறார்களா?

சமாதானத்தை வலியுறுத்தும், பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவளிப்பதாகக் கூறும் அமெரிக்காவும், இந்தியாவும் விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு படைகளை அனுப்பியுதவ ரணிலுக்கு உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்கள் என்ற ஐ.தே.கட்சி தலைவர்களின் பிரகடனம் குறித்து எனன சொல்லப்போகின்றன?


போருக்குப் படை அனுப்பிஉதவ உத்தரவாதமளித்துவிட்டா, தமிழ் மக்களை சமாதானம் பேச வலியுறுத்துகிறார்கள்?

அப்படியெனில் இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தை நடவடிக்கை என்பது பேரினவாதிகளும், சர்வதேச மேலாதிக்க சக்திகளும் தமிழ் மக்களை அழிப்பதற்கான உள்நோக்கத்துடன் பின்னியுள்ள சதிவலை என்றே நம்ப வேண்டியுள்ளது.

இன்றைய நிலையில் தமிழ் மக்களின் மனங்களை ஆக்கிரமித்துள்ள இந்தக் கேள்விக்கான விடையை சொல்லவேண்டிய கடப்பாடு நோர்வே அரசுக்கும், அதன், அனுசரணைப் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கும் தான் உண்டு...

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# சமாதான முயற்சிகளும், பேச்சும் எப்படி எந்த நோக்கத்துடன் நடந்தது, நடக்கும்?

இலங்கையின் ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்காக மக்கள் வாக்களிப்பதற்கு இன்னும் ஏழு நாட்களே இருக்கின்றன. இந்தத் தேர்தலில் இந்த உயர்ந்த பதவிக்காகப் போட்டியிடுபவர்களில் பிரதானமாக விளங்கும் இரண்டு வேட்பாளர்களான எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் பிரதமமந்திரி மஹிந்த ராஜபக்ஷவும் இன்றுவரை வாக்குறுதிகள் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் வாக்களிப்பார்களா, யாருக்கு வாக்களிப்பார்கள் என்பன போன்ற கேள்விகள் எழுந்துள்ள இன்றைய நிலையில் திடீரென்று நாடளாவிய ரீதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டதாக நேற்று ஊடகங்கள் சிலவற்றில் செய்திகள் வெளிவந்திருந்ததைக் கவனித்தீரா என்று கேட்டபடி வந்தார் நண்பர் பரமசிவம்.

இந்தச் செய்தியை நானும் சில பத்திரிகைகளில் பார்த்தேன். ஆனால் நாட்டில் எந்தவிதமான அசம்பாவித சம்பவத்துக்கான அறிகுறிகள் எதையும் நான் பார்க்கவில்லை, எனக்குத் தெரிந்தவர்களும் பார்த்ததாக எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை என்று சொன்னேன்.

ஒரு சில மணி நேரத்துக்குள் பெரும் தாக்குதலுக்குத் தயாராகுமாறு போராளிகளுக்கு விடுதலைப் புலிகள் விடுத்த கட்டளையை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் இடை மறித்துக் கேட்டதைத் தொடர்ந்து வடக்குக் கிழக்கிலுள்ள பாதுகாப்புப் படைகள் எச்சரிக்கை செய்யப்பட்டனராம். நேற்று அதிகாலை கிடைத்த இந்தச் செய்தியைத் தொடர்ந்து வடக்குக் கிழக்கிலுள்ள பாதுகாப்புப் படைகளுக்குக் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டதாம். இரண்டு மாகாணங்களிலும் முக்கிய இடங்களில் கடும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டது. அரசாங்க இலாகாக்களில் கடும் பாதுகாப்புப் போடப்பட்டது. படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டது. படையினரின் பயணங்கள் கட்டுப்படுத்தப்பட்டன என்று கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலத் தினசரி செய்தி வெளியிட்டிருந்தது. இந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு இப்படியான தகவல்கள் எப்படித்தான் கிடைக்கிறதோ தெரியவில்லை என்று பரமசிவம் சொன்னார்.

சில விஷயங்கள் கொஞ்சக் காலம் போன பின்னர்தான் வெளியே வருமென்று நினைக்கிறேன் . விடுதலைப் புலிகளிடமிருந்து "கோடரிக்காம்பு" ஒன்று வெளிப்பட்டபோது ஆட்சி அதிகாரத்திலிருப்பவர்களுக்கு அல்லது அதிகார வர்க்கத்தவர்கள் சிலருக்கும் இதில் தொடர்பிருக்கும் என்ற சந்தேகம் எழுந்தது உண்மை. இதற்கு அந்தக் கோடரிக்காம்பைப் பாதுகாப்பாகக் கொழும்புக்குக் கொண்டு சென்றது ஐக்கிய தேசியக்கட்சியின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரான அலிஸாகிர் மௌலானா என்று தெரிந்ததும் இது உறுதியானது. தனது பழைய நண்பர் என்ற காரணத்தினால் அவருக்குத்தாம் உதவியதாகவும் இதற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமோ அதன் தலைமைப் பீடத்துக்கோ எந்தவிதத் தொடர்புமில்லை என்றும் அலிஸாகிர் மௌலானா தெரிவித்திருந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடமும் அலிஸாகிரின் செயலுக்கும் தங்களுக்கும் தொடர்பில்லை என்று தெரிவித்தது. கட்சியின் "புனிதத் தன்மையை"ப் பாதுகாப்பதற்காக அலிஸாகிர் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைக்கூடத் துறந்தார் என்று சொன்னேன்.

அந்த நாடகத்தின் திரை இப்பொழுது தானே கொஞ்சம் கொஞ்சமாக விலகுகிறது. கருணா உருவாக்கம் பற்றி முன்னாள் மகாவலி அமைச்சர் காமினிதிஸநாயக்காவின் மகன் நவீன் திஸநாயக்கா கினிகத்தேனையில் நடந்த தேர்தல் பொதுக்கூட்டத்தில் தமது தலைவரின் அரசியல் சாணக்கியத்தைப் பற்றிச் சொல்கையில் எடுத்துக் காட்டினார். பின்னர் நேற்று முன்தினம் ரணில் விக்கிரமசிங்காவின் "வலது கை" எனக் கருதப்படும் மிலிந்தமொரகொட கொழும்பிலிருந்து வெளிவரும் "டெயிலி மிறர்" பத்திரிகைக்கு அளித்த ஒரு பேட்டியில் "ஐக்கிய தேசியக் கட்சியின் பெருமுயற்சியின் பங்களிப்பால் முன்னெடுக்கப்பட்ட அமைதி நடவடிக்கைகளின் உருவாக்கமே கருணா. நோர்வேயை அனுசரணைப் பங்கு வகிக்கும்படி தெரிவித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த அழைப்போடு இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. ஒரு போர்க்காலச் சூழ்நிலையில் கருணா போன்ற அதிருப்தியாளர் ஒருவர் உருவாகியிருக்க முடியாது. துப்பாக்கிகளை அமைதியடைய வைத்து தடைகளை அகற்றி வீதிகளைத் திறந்து அதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களுக்கு மாற்றுவழிக்கான சந்தர்ப்பத்துக்குரிய சூழ்நிலையை நாமே உருவாக்கினோம்... முன்னர் புலிகள் செயற்பட்டது போன்று அவர்கள் நடக்க முடியாத சரியான சூழ்நிலையை நாங்கள் உருவாக்க வேண்டும் என்றே ரணில் விக்கிரமசிங்கா எப்போதும் கூறி வருகின்றார் என்று மொறகொட கூறியிருக்கிறார்" என்று பரமசிவம் சொன்னார்.

சமாதான முயற்சிகளும் சமாதானப் பேச்சுக்களும் எந்தெந்த உருவத்தில் நடைபெறுகிறதென்பது இப்போது தானே தெரிகிறது என்றேன்.

அவர்கள் சமாதானமெல்லாம் எப்படியும் தமிழ் மக்களைப் பிரித்து மடக்கி ஒதுக்கி வைத்துத் தமது ஆதிக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறது. எந்தத் தலைவருடன் எந்தக் கட்சியுடன் நம்மவரில் எவர் பேசினாலும் அவர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதிலேயே குறியாக இருப்பார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டியது அவசியம் என்று சொன்னபடி பரமசிவம் நடந்தார்.

## மாமனிதர் அமரர் அழகையா துரைராஜா

### ஒரு மனிதநேய பேராசிரியர்

**அன்னாரின் 72 ஆவதுபிறந்ததினம் இன்று**



வடமராட்சி இமையாணன் கிராமத்தில் 1934 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 10 ஆம் நாள் அழகையா, செல்லம்மா தம்பதியின் சிரேஷ்ட புதல்வனாக பிறந்தவர் தான் பேராசிரியர் அ.துரைராஜா அவர்கள், சிறுவயதிலேயே சகல துறைகளிலும் பிரகாசித்த துரைராஜா அவர்கள், கல்வியிலும் மிகச் சிறப்பாக கவனம் செலுத்தி வந்தார். இவர் தனது இளமைக் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும், உயர் கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் திறம்படக் கற்று, 1953 ஆம் ஆண்டு பல்கலைகழகத்துக்கான தெரிவுப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் குடிசார் எந்திரவியல் பீடத்துக்கு தெரிவாகி தனது திறமைமைக் காட்டினார். பின்னர் அந்தப் பல்கலைக் கழகத்தில்பட்டப்படிப்பை மேற்கொண்டு முதலாம் தா சிறப்புப் பட்டம் பெற்று, அந்தப் பல்கலைக்கழகத்தின் குடிசார் எந்திரவியல் துறையின் போதனாசிரியராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதன் பின்னர் 1958 ஆம் ஆண்டில் இருந்து சிறிது காலப்பகுதியில் இவர் இலங்கைப் பொதுவேலைத் திணைக்களத்தில் தன்னை ஒரு உதவிப் பொறியியலாளராக இணைத்துக் கொண்டார். இக்காலத்தில் இலங்கைப் பல்கலைக் கழகம்வழங்கிய புலமைப் பரிசிலின் அடிப்படையில் இவரின் பிரத்தியேகத் திறமைகளை இனங்கண்டு கொண்ட கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தின் மண் பொறியியற்துறைப் பேராசிரியர் கே.எச். றொஸ்கோ இவரை ஆய்வு மாணவனா கத் தேர்ந்தெடுத்தார்.

இவர் மேற்கொண்ட ஆய்வுகளின் விளைவாக இவரினால் வடிவமைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட Cam clay model ஒன்று அவருக்கு சர்வதேசப் புகழை ஈட்டிக் கொடுத்தது மட்டுமன்றி, எதிர்காலத்தில் மண்பற்றிய ஆய்வுகளுக்கு ஒரு உந்து விசையாக அமைந்ததுடன், புவிசார் எந்திரவியல் தொழில்நுட்ப உபகரணம் ஒன்றின் வளர்ச்சிப் படிக்கல்லாகவும் கருதப்படுகிறது.

இதன் பின்னர் 1962 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் குடிசார் எந்திரவியல்துறை விரிவுரையாளராகத் தன்னை இணைத்துக் கொண்டார். அந்தக் காலகட்டத்தில் கொழும்பில் இயங்கி வந்த இந்தப் பல்கலைக் கழகத்தின் எந்திரவியற்பீடம் பேராதனைக்கு இட மாற்றம் செய்யப்பட்டது.

தனது ஆராய்ச்சித் திறமையால் இந்தப் பல்கலைக் கழகத்தில் ஒரு தரமான ஆய்வுகூடத்தை நிறுவி அதனை நிர்வகிப்பதில் பெரும்பங்கு வகித்தார். இலங்கை மண்ணின் பொறியியல் பண்புகளை ஆராய்வதற்கும் அந்த ஆய்வுகூடம் பெரிதும் பயன்பட்டது.

நாட்டில் ஏற்பட்ட குழப்ப சூழ்நிலைகளால் மற்றைய பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டிருந்த போது யாழ். பல்கலைக் கழகம் மிகச் சிறப்பாக இயங்கியதென்றால், அது பேராசிரியர் துரைராஜா எவ்வளவு மிகச் சிறந்த நிர்வாக திறமை மிக்கவர் என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது அல்லவா?


1994 துணைவேந்தர் பதவியில் இருந்து விலகி திறந்த பல்கலைக்கழகத்தின் குடிசார் எந்திரவியல் பேராசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அங்கு அமரராகினார். பேராசிரியர் துரைராஜா அவர்களின் மறைவால் நாம் சிறந்ததொரு பொறியியல் மேதையையும், விஞ்ஞானியையும், ஆராய்ச்சியாளரையும், நிர்வாகியையும், பேராசிரியரையும் மட்டுமல்லாது மனிதநேயமிக்க சீரிய பண்பாளனையும் இழந்து விட்டோம். அன்னார் பல்கலைக்கழக வட்டங்களால் மட்டுமல்லாமல் அனைத்து மக்களாலும் நேசிக்கப்பட்ட மாமேதை.

# மாணவர் எழுச்சியின் மற்றுமொரு பரிமாணம்

# தமிழர் தாயகத்தின் முதல் மாணவர் மாநாடு

**தமிழர் தாயகத்தின் முதல் மாணவர் மாநாடானது எதிர்வரும் கார்த்திகை 11ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது. இதற்கான சகல ஒழுங்குகளையும் தமிழ் மாணவர் ஒன்றியமானது மேற்கொண்டு வரும் வேளையில் அந்த மாநாடு தொடர்பாக இந்தக் கட்டுரை அமைகின்றது.**

தமிழர்களின் இலட்சிய விடுதலைப் போராட்டத்திற்காக பல்வேறு கால கட்டங்களிலும் வேராகவும், விழுதாகவும் நின்று மாணவர்கள் ஆற்றிய, ஆற்றிவரும் பங்களிப்புக்கள் தமிழீழ விடுதலைப்



போராட்ட வரலாற்றில் போற்றப்பட வேண்டியதாகும். இருந்தபோதிலும் இனவெறி கொண்ட சிங்கள தேசமானது தன் கறை படிந்த கரங்களினால் தமிழ் மாணவர்களின் குரல்வளையாக விளங்குகின்ற கல்வ்யினை நசுக்கும் வகையில் கொலைத தாண்டவம் ஆடி வருகின்றது. தற்போதைய சமாதான சூழ்நிலையிலும் கூட சிங்கள இராணுவமானது தமிழ் மாணவர் மீது மறைமுகமான உளவியல் யுத்தமொன்றை நடாத்தி வருகின்றது, அந்தவகையில் மாணவர்கள் எதிர்நோக்குகின்ற நெருக்கடிகளினை ஆராய்வதற்கும் அவற்றினை எதிர்காலத்தில் அகற்றுவதற்கான நடவடிக்கைகளினை எடுப்பதற்காகவுமே இந்த மாநாடு கூட்டப்படுகின்றது.

### மாணவர் எதிர்நோக்கும் நெருக்கடிகள்

கடந்த இரண்டு தசாப்தங்கழுக்கு மேலாக எமது தாயகத்தில் நடைபெற்ற யுத்தத்தாலும், யுத்தத்தால் நிகழ்ந்த இடப்பெயர்வுகளாலும் உண்டான விளைவுகளை தமிழ் மாணவர் இன்று வரை அனுபவித்து வருகின்றனர். கடந்த காலங்களிலே புலிகள் என்ற போர்வையில் அப்பாவித் தமிழ் மாணவர்கள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டதும், சிங்களக் காமுகர்களின் உடற்பசிக்கு தமிழ் மாணவிகள் சிலர் இரையாகிப் போனதும் குறிதவறிய தாககுதல் என்ற போர்வையில் பாடசாலை மாணவர் மீது மேற்கொள்ளப்பட்ட விமான குணடு வீச்சுக்களும் மாணவர்களின் மனங்களில் ஆழப்பதிந்த வடுக்களாக ஆகி விட்டன. தமிழ் மாணவர்களின் உயிர்களைக் குடித்த சிங்கள வெறியர்கள் அவர்களின் உயிர்மூச்சாக விளங்கும் கல்வியை சிதைப்பதிலும் குறியாகவே செயற்பட்டு வருகின்றனர்.

யுத்தமோ சமாதானமோ அற்ற இன்றைய சூழ்நிலையில் கூட தமிழ் மாணவர்களின் மீது சிங்களப்பேரினவாத அரசானது இருட்டடிப்பான யுத்தமொன்றை நிகழ்த்தி வருகின்றது. தமிழர் தாயகத்திலே இன்றும் பல பாடசாலைகள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் சிங்கள இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்களில் பலர் தமது கல்வி நடவடிக்கையை தொடரமுடியாத நிலையில் இடைவில கித் தொழில் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். அத்தோடு உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையால் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல முடியாத நிலையில் முகாம்களில் தங்கி யிருந்து கல்வியினை தொடரும் மாணவர்களும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் மீதியாகவுள்ள பாடசாலைகளிற்கு அருகிலும் இராணுவக் காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளமையும் அதிலும் குறிப்பாக பெண்கள்பாடசாலைக்கு அருகில் நிலக்கீழ் காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளமையுமானது தமிழ மாணவர்களின் அமைதியான கல்வி நடவடிக்கைக்கு வேட்டுவைக்கும் முயற்சியாகவே கருத வேண்டியுள்ளது. இது தவ்ர, தமிழர் தாயகத்தில் கடந்த காலங்களிலே மாணவர்களினால் முன்னெடுக்கப்பட்ட எழுச்சி நிகழ்வுகளின் போதும் எதிர்ப்பு நடவடிக்கைகளின் போதும் சிங்களப் படையினர் தமது அடாவடித்தனமான அடக்கு முறைகளை மாணவர்கள் மீது பிரயோகிக்கின்றார்கள். குறிப்பாக 2000 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட யாழ். இந்துக்கல்லூரி மாணவன் சஞ்சீவன் 2005ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி துளசிகா ஆகியோரின் படுகொலைகளை அடுத்து இடம் பெற்ற அசம்பாவிதங்களின் போது பல மாணவர்கள் கடுமையாக தாக்கப்பட்டும் கைதுசெய்யப்பட்டும் இருந்தனர். இது தவிர 2003 ஆம் ஆண்டு யாழ. இந்துக்கல்லூரி வளாகத்தில் இடம பெற்ற மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகளை நடாத்த விடாமல் தடுக்கும் பொருட்டு அதனை ஏற்பாடு செய்தவர்களுக்கு கொலை அச்சுறுத்தலும் விடுத்தனர். இதே போல 2005 இல் நடைபெற்ற மாணவ் எழுச்சி பொங்கு தமிழ் நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்கள் சீருடையுடன் கலந்து கொள்ளக் கூடாது என அதிபர்களுக்கு படைத்தரப்பால் அச்சுறுத்தல் விடப்பட்டிருந்ததும் இங்கு நினைவுகூரத்தக்கது.



மற்றொருபுறம் சிங்கள இராணுவமானது தான் ஆக்கிரமித்து வைத்துள்ள தமிழர் தாயகப்பிரதேசங்களில் எமது கலாசார விழுமியங்களை நலிவடையச் செய்வதனூடாக தமிழ் மாணவர்களின் கல்வி மட்டத்தினை வீழ்ச்சியடையச் செய்யும் நோக்குடன் சலுகைகள் என்ற பேரில் சமூகவிரோதிகளின் துணையுடன் மாணவர் சமூகத்தை சதிவலைக்குள் சிக்கவைக்கும் முயற்சியில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

### எழுச்சிப்பிரகடனம்

கடந்த 2002 - 2003 காலப்பகுதிகளில் தமிழர் தாயகத்தில் மாணவர் எழுச்சி நிகழ்வுகளின் போது 'நிலங்காக்கும் நிறைவான கல்விக்கு வித்திடுவோம்' என்பதனை வலியுறுத்தி பல்லாயிரக்கணக்கான பாடசாலை மாணவர்கள் அணி திரண்டு எழுச்சிக் கோஷமிட்டனர். இங்கு வெளியிடப்பட்ட எழுச்சிப்பிரகடனத்தில் மாணவர் தமது சொந்த இடங்களுக்குத்திரும்பிச் சென்று சுதந்திரமாகக் கல்வி கற்பதற்கு படையினர் தடையாக உள்ளனர் என்றும், உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தமது பாடசாலைகளினை ஆக்கிரமித்திருக்கும் படையினர் உடனடியாக வெளியேற வேண்டும் எனவும் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மாணவர் கல்வி உரிமைகளை மதித்து நடக்க வேண்டும் எனவும் அதில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருந்தது. இருந்த போதும் சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மாணவர்களின் கோரிக்கைகளிற்கு நியாயமான தீர்வுகளையோ அல்லது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையோ எடுக்கவில்லை என்பது இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்.

### மாணவர் ஒன்றியமும்-மாநாடும்

தமிழ் மாணவர்களிற்கு சுதந்திரமானதும் அமைதியான கல்வியினை பெற்றுக் கொடுப்பதற்காகவும் மாணவரை இராணுவத்தினரின் அச்சுறுத்தலிலிருந்து பாதுகாப்பதற்காகவும் இராணுவ ஆக்கிமிப்புகளினால் பாடசாலைக்கல்வியினை இழந்த மாணவர்களிற்கு மீழ் கல்வியினை பெற்றுக் கொடுப்பதற்காகவுமே மாணவர் ஒன்றியம் தோற்றுவிக்கப்பட்டது. இந்த வகையில் ஆண்டாண்டு காலமாக ஆட்சி நடாத்தி வரும் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் தமிழ் மாணவர்களின் கல்வி உரிமையினை நசுக்கும் வகையில் செயற படுவதினை சர்வதேச சமூகத்திற்கு வெளிக்காட்டுவதற்காகவும் தமிழ் மாணவர் மீதான சிங்களப்படையினரின் கொலை வெறிக் கலாச்சாரம் எதிர்வரும் எதிர்வரும் காலங்களில் நடைபெறாமல் தடுப்பதற்குமான நடவடிக்கைகளில் தமிழ் மாணவர் ஒன்றியமானது அதிக கரிசனையோடு செயலாற்றி வருகின்றது. இந்த நிலையில் தான் இன்றைய கால கட்டத்தில் தமிழ் மாணவர் எதிர்நோக்கும் பிரச்சனைகளினையும் அவற்றினை அகற்றுவதற்கான வழிமுறைகளினையும் ஆராயும் பொருட்டு இந்த மாநாட்டினை தமிழ் மாணவர் ஒன்றியமானது கூட்டுகின்றது.

### மாணவர் மாநாடு

விடுதலையின் விளிம்பில் நிற்கும் ஒரு இனத்தின் இளையசக்தி மாணவர்கள். மாணவர்கள் தாங்களாகவே ஒன்று கூடி தாம் எதிர்நோக்கும் சவால்களைப் பற்றி ஆராயவுள்ளனர் என்ற வகையில் இம் மாநாடானது அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக அமையவிருக்கின்றது. ஏனெனில் இதுவரை காலமும் தமிழர் தாயகத்திலே எமது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்ட பேரெழுச்சிகளின் வெற்றிக்கும் சிங்களப் பேரினவாத சக்திகளின் அடக்கு முறைகளுக்கும் எதிராக முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்புப் போராட்டங்களின் வெற்றிக்கும் பாடசாலை மாணவர்கள் பெரும் பங்காற்றியிருந்தனர். அவ்வாறான பலம் மிக்க மாணவர் சக்திகளின் பிரதிநிதிகளினை ஒன்று கூட்டி இம் மாணவர் மாநாடு நடாத்தப்பட இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்காக யாழ் மாவட்டத்தில் உள்ள உயர்தரப்பாடசாலைகளின் ஒன்றியங்கள் மாணவர் முதல்வர் சபை ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் ஒன்று கூடவுள்ளனர். இவர்கள் தாம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மாணவர் சமூகமானது எதிர்நோக்குகின்ற கல்வி வறுமை இராணுவ நெருக்கடிகள் மற்றும் சுனாமியின் பின்னரான மாணவரின் கல்விநிலை தொடர்பாகவும் அவற்றை அகற்றுவதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் ஆராயவுள்ளனர். இந்த மாநாட்டிற்கு மாணவரின் நலனை மையமாகக் கொண்டு செயற்படுகின்ற அரசசார்பற்ற தனியார் தேசிய மற்றும் சர்வதேசப் பொதுத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். இந்த மாநாடானது மாணவர் சமூகத்தைப் பலவீனமடையச் செய்ய நினைக்கும் சிங்கள தேசத்திற்கும் அவர்களின் பிரச்சினை தொடர்பில் பாராமுகமாக இருக்கும் சர்வதேசத்திற்கும் நல்ல படிப்பினைகளினை புகட்டும் என்பது உண்மையாகும்.

**ச.நிலக்ஷன்**

# அவசரகால நிலை பிரான்ஸில் பிரகடனம்



பாரிஸ் —

பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் நகரம் மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் சிறுபான்மை ஆபிரிக்கர்கள் கலவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பொலிஸார் தாக்கியதில் 2 ஆபிரிக்க இளைஞர்கள் பலியானதை கண்டித்தும் சிறுபான்மை ஆபிரிக்கர்களுக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்படுவதை கண்டித்தும் இந்த கலவரம் நடக்கிறது. 13 ஆவது நாளாக நடந்த இந்தக் கலவரத்தில் 3000க்கும் மேற்பட்ட கார்கள் எரிக்கப்பட்டன. கலவரத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பாரிஸ் நகர நிர்வாகம் திணறுகிறது. இந்தக் கலவரம் இப்போது மற்ற நகரங்களுக்கும் பரவுகிறது.

சில இடங்களில் இனக்கலவரமும் உருவாகி வருகிறது. இதைத் தொடர்ந்து பாரிஸ் மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இரவுநேர ஊரடங்கு உத்தரவும் அமுல் படுத்தப்பட்டுள்ளது. பொலிஸாருக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 300க்கும் மேற்பட்டவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த நிலையில் பாரிஸ் நகரம் அதன் புறநகர் பகுதிகளிலும் கலவரக்காரர்கள் பாடசாலை மீது வெடி குண்டுகளை வீசுகிறார்கள். இதனால் பாடசாலைக்கு செல்லவே குழந்தைகள் அச்சமடைந்துள்ளனர்.

# சதாமுக்காக ஆஜராகிய மற்றொரு சட்டத்தரணியும் சுட்டுக் கொலை!

பாக்தாத் —

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் உட்பட 7 பேர் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு, பாக்தாத் நீதிமன்றில் விசாரணை கடந்த ஒக்ரோபர் மாதம் தொடங்கியது. சதாமின் சட்டத்தரணி ஜனாபி அவரது அலுவலகத்தில் இருந்தபோது, கடந்த மாதம் 20ஆம் திகதி இனந் தெரியாதவர்கள் கடத்திச்சென்று சுட்டுக் கொன்றனர்.

இந்த நிலையில் சதாமுக்காக நீதிமன்றில் ஆஜராகும் குழுவைச் சேர்ந்த அடில் - அல்ஜீ பெய்டி, தோமர், ஹமவுட் அல் குஜைய் ஆகிய இருவரும், மேற்கு பாக்தாத்தில் ஒரு காரில் நேற்று முன்தினம் சென்றுகொண்டிருந்தனர். அப்போது இனந் தெரியாதவர்கள் கார் மீது சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். இதில் சட்டத்தரணி அடில் - அல் - ஜீபெய்டி மீது துப்பாக்கி குண்டு பாய்ந்து காருக்குள்ளேயே இறந்தார்.

மற்றொரு சட்டத்தரணி தோமர் ஹமவுட் அல் குஜைய் மீது துப்பாக்கிக் குண்டு பாய்ந்து படுகாயமடைந்தார். சதாமின் சட்டத்தரணிகள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படுவதால், சதாமின் மற்றய சட்டத்தரணிகளின் உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இதனால் வழக்கு விசாரணையை வெளி நாட்டில் நடத்த அவர்கள் ஆலோசனை செய்து வருகின்றனர்.

உலக நோக்கு

# நேபாள முன்னாள் பிரதமரின் மகன் மாவோ கிளர்ச்சிவாதிகளால் கடத்தல்

காட்மாண்டு —

நேபாளத்தில் மன்னர் ஆட்சிக்கு எதிராக மாவோ கிளர்ச்சிவாதிகள் போராடி வருகின்றனர்.

கிளர்ச்சிவாதிகளுக்கும் ராணுவத்துக்கும் இடையே நடந்த மோதலில் இதுவரை 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியாகிவிட்டனர்.

இந்த நிலையில் நேபாள முன்னாள் பிரதமரின் மகனையும் கிளர்ச்சிவாதிகள் கடத்திச் சென்றுவிட்டனர்.

நேபாளத்தில் முன்பு பிரதமராக இருந்தவர் லோகேந்திர பகதூர் சந்த். இவரது மகன் அருண். சுகாபசார் பகுதியில் உள்ள தனது தந்தையின் சர்க்கரை தொழிற்சாலையை அருண் கவனித்துக்கொண்டிருந்தார். அப்போது கிளர்ச்சிவாதிகள் துப்பாக்கி முனையில் அருணை கடத்திச் சென்றுவிட்டனர்.

கடந்த ஒரு மாதமாக அருண் கிளர்ச்சிவாதிகளின் பிடியில் பணயக் கைதியாக உள்ளார்.

அவரை விடுவிக்க மனித உரிமை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் முயற்சி எடுத்து வருகின்றனர். அருணை விடுதலை செய்ய வேண்டுமானால் ரூபா 7 கோடி தரவேண்டும் என்று கிளர்ச்சிவாதிகள் நிபந்தனை விதித்துள்ளனர். இதில் பொலிஸார் தலையிடக் கூடாது என்றும் கிளர்ச்சிவாதிகள் எச்சரித்துள்ளனர்.

# ஹொலிவுட் பட உலகிலும் புகை பிடிக்கும் காட்சிக்கு தடை

சிக்காக்கோ —

ஹொலிவுட் பட உலகமும் புகை பிடிக்கும் காட்சிக்குத் தடை விதிப்பது குறித்து ஆலோசித்து வருகிறது.

புகை நமக்கு பகை என்று தெரிந்தும் புகை பழக்கத்தைக் கைவிட முடியாமல் ஏராளமானவர்கள் திணறுகிறார்கள். புகை பழக்கத்தை ஒழிக்கும் ஒரு நடவடிக்கையாக சினிமாக்களில் புகை பிடிக்கும் காட்சிக்கு இந்தியாவில் தடை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதேபோல் ஹொலிவுட் பட உலகமும் புகை பிடிக்கும் காட்சிக்குத் தடை விதிப்பது குறித்து ஆலோசித்து வருகிறது.

அமெரிக்காவிலும், சிக்காக்கோவிலும் உள்ள டார்ட்முத் மருத்துவ பயிற்சி நிலைய டொக்டர்கள் இளைஞர்களிடம் ஒரு ஆய்வு நடத்தினர். 10 முதல் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களிடம் சிகரெட் பிடிக்கும் பழக்கம் எப்படி வந்தது என்று கேட்கப்பட்டது. 6522 இளைஞர்கள் மற்றும் சிறுவர்களிடம் கேட்கப்பட்டதில் 40 சதவீதமானோர் சினிமாவில் தங்களுக்குப் பிடித்தமான நடிகர் நடிகைகள் ஸ்டைலாக புகை பிடிப்பதைப் பார்த்துத்தான் புகை பிடிக்க ஆரம்பித்ததாகத் தெரிவித்தனர்.



# பாகிஸ்தானில் இடம்பெற்ற பூகம்பத்தில் 87 ஆயிரம் பேர் உயிரிழந்ததாக தகவல்

இஸ்லாமாபாத் —

பாகிஸ்தான் நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீர் பகுதியில் கடந்த மாதம் எட்டாம் திகதி ஏற்பட்ட பாரிய நிலநடுக்கத்தில் 87 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச தொண்டு நிறுவனங்கள் கணக்கிட்டுள்ளன. இந்த அறிவிப்பைச் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் உயிரிழப்பு தொடர்பான விபரங்களைக் கணக்கிட்ட பின்னர் பாகிஸ்தான் நிதியமைச்சு அதிகாரி இக்பால் அகமட்கான் தெரிவித்தார்.

இந்த கணக்கெடுப்பின்படி மூன்று மில்லியன் மக்கள் வீடுகளை இழந்து நிர்க்கதியாகியுள்ளனர். இவர்களில் பலர் இதுவரை எவ்வித உதவியையும் பெறவில்லை.


உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய தொண்டு நிறுவனங்கள், பாகிஸ்தான் அரசின் உள்ளூர் அதிகாரிகளுடன் இணைந்து உதவிப் பணிகளில் ஈடுபட்டுள்ளன. இந்தப் புதிய உயிரிழப்புத் தொகை முன்னர் வெளியிட்ட தொகையை விட வேறுபட்டதென அவர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தொண்டு நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளில் பணிபுரிகின்றன. எனவே, அவர்களின் தகவல்கள் புதியவையாக இருக்குமென பாகிஸ்தான் நிதியமைச்சு அதிகாரி இக்பால் அகமட்கான் தெரிவித்தார்.

இதேவேளை, குளிர்காலம் நெருங்குவதால் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கலாமென ஐ.நா.எச்சரித்துள்ளது. எனவே, சர்வதேச சமூகம் பெருமளவு உதவிகளை வழங்கினாலேயே, நிர்க்கதியாகியுள்ள 3 லட்சத்து 50 ஆயிரம் மக்களுக்கு குடியிருப்புக்களை அமைத்துக் கொடுக்கலாமெனவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.



# அவுஸ்ரேலிய பொலிஸாரின் நடவடிக்கையால் பயங்கரவாதிகளின் தாக்குதற்திட்டம் முறியடிப்பு



சிட்னி —

அவுஸ்ரேலியாவின் சிட்னி, மற்றும் மெல்போர்ன் நகரங்களில் 16 பேரைக் கைதுசெய்ததன் மூலம் பயங்கரவாதிகள் நடத்தவிருந்த தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக அவுஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்தனர்.

பாரியளவில் பெரும் சேதத்தை ஏற்படுத்தக் கூடிய பயங்கரவாதிகளின் தாக்குதல்த் திட்டமே தம்மால் முறியடிக்கப்பட்டதாக நியூ சவுத் வேல்ஸ் பொலிஸ் அதிகாரி கென் மொரோனே தெரிவித்தார்.





சிட்னி மற்றும் மெல்போர்னில் 23 வீடுகள் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டன. இந்த நடவடிக்கையில் சுமார் 500 பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். 16 மாத காலமாக இடம்பெற்ற விசாரணைகளின் பின்பே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மெல்போர்ன் நடவடிக்கையில் அல்ஜீரிய, அவுஸ்ரேலிய மத குரு அபு பக்கர் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் நீதிமன்றம் முன் ஆஜர்படுத்தப்பட்டு, பயங்கரவாத அமைப்பின் உறுப்பினர்களென குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் பயங்கரவாத அமைப்பொன்றை ஏற்படுத்தி அதன் மூலம் அவுஸ்ரேலியாவில் அப்பாவிப் பெண்களையும் மற்றவர்களையும் கொல்லத் திட்டம் தீட்டியதுடன், இராணுவ ரீதியான பயிற்சியை அவுஸ்ரேலிய கிராமங்களில் பெற்றதுடன், குண்டு தயாரிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளனர் என சட்டத்தரணி றிச்சாட் மெயிட்மென்ட் நீதிமன்றில் தெரிவித்தார். அத்துடன், கைது செய்யப்பட்ட அபுபக்கர் மெல்போர்ன், மற்றும் சிட்னி நகரங்களில் கைதானவர்களின் பிரதான தலைவராகவும் இருந்தார் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, சிட்னியில் இடம் பெற்ற தேடுதல் நடவடிக்கையின் போது பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் சந்தேகநபர் ஒருவர் படுகாயமடைந்தார். இவரைச் சரணடையுமாறு தாம் விடுத்த வேண்டுகோளை இவர் ஏற்க மறுத்ததாலேயே இவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், இங்கிருந்து ஆயுதங்கள், கணினிகள், இரசாயனப் பொருட்கள் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. இந்த இரசாயனப் பொருட்கள், லண்டன் குண்டு வெடிப்பிற்கு பயன்படுத்தப்பட்ட வகையைச் சேர்ந்ததெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குழுவினர் அவுஸ்ரேலியாவில் எந்த இலக்கைத் தாக்கத் திட்டமிட்டனர் என்பதனை பொலிஸார் தெரிவிக்கவில்லை. எனினும், அடுத்த வருடம் கொமன்வெல்த் நாடுகளுக்கிடையிலான தடகளப் போட்டி நடைபெறவிருந்ததாகவும், ஆனால் அது இவர்களின் தாக்குதல் இலக்கு அல்ல என விக்ரோறியா பொலிஸ் அதிகாரி கிறிஸ்ரின் நிக்ஸன் தெரிவித்தார்.

அவுஸ்ரேலியாவில் பயங்கரவாத அச்சுறுத்தல் இருந்ததென்பதனை புலனாய்வுத் தகவல்கள் மூலம் தான் பெற்றதாகவும், பொலிஸாரின் இந்த நடவடிக்கை பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலை முடிவுக்குக் கொண்டுவந்ததுடன், தொடர்ந்தும் இது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அவுஸ்ரேலிய பிரதமர் ஜோன் ஹொவாட் தெரிவித்தார்.


# சாவு அறிவித்தல்



## கணபதி நவரட்ணம்

(இராசு)

மானிப்பாய் ஆனந்தா வீதியைப் பிறப்பிடமாகவும், இல.175, அரசடி வீதி, முதலாம் ஒழுங்கை, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி நவரட்ணம் நேற்று புதன்கிழமை இறைபதம் எய்தினார். அன்னார் காலஞ்சென்ற கணபதி நாகம்மாவின் மூத்த மகனும், மலரின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, பூவிலிங்கம், மகாலிங்கம் (ஜேர்மனி), சிவலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தெய்வேந்திரம், நல்லம்மா, பசுபதி, நேசமலர் ஆகியோரின் மைத்துனரும், ஜீவரட்ணம், விசுவரட்ணம், சிவமதி, சுகிந்திமதி, ரஞ்சிதமதி, ரஜிதமதி (முதலாம் வருட மாணவி, கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), பிலேபரட்ணம் ஆகியோரின் அன்புத் தந்தையும், மெலானி, விமலாதேவி, செல்வராசா (ஈழநாதம் மக்கள் தினசரி), ராஜ்குமார், சுதர்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கெற்சிகா, நிலாவரசி, டென்சிகா, டெலக்சிகா, டெலக்சீன், துஸ்யந்தன், சாருஜா, ராகுலன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்றுமாலை 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.175, அரசடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(2109)

# திருமண வாழ்த்து



கடந்த 27.10.2005 செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்துகொண்ட பருத்தித்துறை சமுர்த்தி வங்கி காசாளர் ரவிக்குமார், தர்மங்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர் சந்திராதேவி தம்பதிகளை இல்லற வாழ்வில் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறோம்.

பருத்தித்துறை சமுர்த்தி நண்பர்கள்,
பா.மணிக்குமார்
சி.சிவகாந்தன்
சோ.ஞானமுரளி

(சி/4823)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மரணமான மற்றும் வெளிநாடு சென்ற வாக்காளர் விபரங்களை உடன் திரட்ட யாழ். மாவட்ட அரச அதிபர் பணிப்பு!

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதியில் இடம்பெயர்ந்து வெளிநாடுகள் சென்ற வாக்காளர்கள், மரணமடைந்த வாக்காளர்கள், சுனாமி அனர்த்தத்தால் மரணமடைந்த வாக்காளர்கள், காணாமற்போன வாக்காளர்கள் போன்றோரின் விபரங்களை உடன் திரட்டுமாறு கிராம உத்தியோகத்தர்களுக்கு யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும், யாழ்.மாவட்ட அரச அதிபருமான கே.கணேஷ் பணித்துள்ளார்.

நேற்று யாழ்.செயலகத்தில் பத்திரிகையாளர் மத்தியில் உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு கருத்துத் தெரிவிக்கையில்-

யாழ்.மாவட்டத்தில் தற்போது இறந்தவர்கள், வெளிநாடு சென்றவர்கள், சுனாமியால் காணாமற்போனோர் போன்றவர்களுக்கும் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. எனவே, இவர்களின் வாக்காளர் அட்டைகளை பயன்படுத்தி முறையற்ற வாக்களிப்புக்களில் சிலர் ஈடுபடலாம்.

எனவே, இவ்வாறான சந்தர்ப்பங்களை தவிர்ப்பதற்கு மேற்படி நபர்களின் பெயர் விபரங்களை திரட்டுமாறும் பணித்துள்ளேன்.

இதைவிட, யாழ்.மாவட்டத் தேர்தல் தொகுதியில் 4,568 பேர் தபால் மூலம் வாக்களிக்க தகுதிபெற்றிருந்த போதும் 3177 பேர் நேற்று மாலைவரை வாக்களிக்கவில்லை.

இதைவிட இடம்பெயர்ந்த வாக்காளர்களின் நன்மை கருதி விசேட போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதுடன், முகமாலை இராணுவத்தினரின் சோதனைச் சாவடியில் பொருட்களை ஏற்றி இறக்கும் இடத்தில் ஐந்து பிரிவாக கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கமைய கரைச்சி பிரதேச செயலகத்திற்கு 42 வாக்களிப்பு நிலையங்களும், கண்டாவளை பிரதேச செயலகத்திற்கு 16 வாக்களிப்பு நிலையமும், பூநகரி பிரதேச செயலகத்திற்கு 18 வாக்களிப்பு நிலையமும், பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு 8 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன் தீவகங்களுக்கு அதிகாரிகள் செல்வதற்கும், வாக்களிப்பு முடிந்தவுடன் வாக்காளர் அட்டைகள் எடுத்து வருவதற்கும் விசேட படகுகள் பயன்படுத்தப்படுவதுடன், நெடுந்தீவில் இருந்து வாக்காளர் அட்டையை எடுத்துவருவதற்கு ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

# தமிழ்க் குழுக்களின் பாதுகாப்பு பொலிஸாரால் திடீரென நீக்கம்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பிலுள்ள ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா அணி), புளொட் ஆகிய அமைப்புக்களின் உறுப்பினர்கள் வெளியில் பயணம் செய்யும் போது - வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பு கடந்த திங்கட்கிழமை, நண்பகல் முதல் நீக்கப்பட்டுள்ளது.

உயரதிகாரிகளிடமிருந்து கிடைத்த உத்தரவையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிழக்கு படைத் தலைமையகத் தகவல்கள் தெரிவித்தன.

போர்நிறுத்த உடன்படிக்கைக்கு அமைய மேற்படி குழுக்களை நிராயுதபாணிகளாக்கியபோது, அவர்களது பிரசாரங்கள் மற்றும் அரசியல் நடவடிக்கைகளுக்கு, பாதுகாப்பு வழங்கப்படுமென உடன்பாடு இருந்தமையால், கடந்த 7 ஆம் திகதி முதல் பொலிஸ் பாதுகாப்பு இருந்ததாகவும், திடீரென அது நிறுத்தப்பட்டதால், தமது உணவுத் தேவைகளுக்கு கூட வெளியில் செல்ல முடியாதிருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பாளர் துரைரத்தினம் தெரி வித்தார்.

பொலிஸ் பாதுகாப்பின் மத்தியில் அரசியல் நடவடிக்கைகளில் இந்தக் குழுக்கள் ஈடுபடுவதாக கிடைத்த குற்றச்சாட்டை அடுத்து மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். (தே)

# திருகோணமலையில் கரையொதுங்கும் லட்சக்கணக்கான உயிரிழந்த மீன்கள்!

திருகோணமலை —

திருகோணமலை உட்துறைமுக வீதியிலுள்ள கரையோரப் பகுதியில் லட்சக்கணக்கான இறந்த மீன்கள் கரையொதுங்கி வருகின்றன.

இதனால் திருகோணமலை நகர்ப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரு தினங்களாக சூடை மீன் இனத்தைச் சேர்ந்த சாளை மீன்களே இறந்த நிலையில் கரையொதுங்கி வருவதாகக் கூறப்படுகிறது.

குறித்த மீனினம் திடீரென இவ்வாறு கரையொதுங்கி வருவது பல்வேறு தரப்பினரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

குறித்த மீனினம் இறந்து கரையொதுங்கி வரும் உட்துறைமுக வீதியில் கடற்படையினரின் பாரிய முகாம் அமைந்துள்ளது. இங்கு வெடி பொருள் ஏதாவது வெடிக்க வைக்கப்பட்டதால் நீரில் ஏற்பட்ட நச்சுத் தன்மை காரணமாக இந்த மீன்கள் உயிரிழந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

அண்மைக்காலமாக கடலில் ஏற்பட்டுவரும் மாற்றங்களும் இதற்குக் காரணமாக இருக்கலாமெனவும் கூறப்படுகிறது.

கரையொதுங்கிய மீன்களை அகற்றுவதற்கு நேற்று மாலை வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் நகர்ப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

இதேவேளை - கரையொதுங்கியுள்ள மீன்களை உடன் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி பொது அமைப்புக்கள் திருகோணமலை நகர சபையினரையும் சுகாதாரப் பிரிவினரையும் கோரியுள்ளனர். (10,04)

## ஏழு தமிழ் அகதிகள் மன்னார் திரும்பினர்!

தலைமன்னார் —

தமிழ் நாட்டின் திருநெல்வேலி மாவட்டம் சமுத்திரம் அகதி முகாமில் வசித்துவந்த 7 ஈழத்தமிழ் அகதிகள் நேற்றுக்காலை தலைமன்னார் ஊடாக தாயகம் திரும்பினர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் அதிகாலை இராமேஸ்வரத்தில் இருந்து சிறிய படகுமூலம் பேசாலை சிறுதோப்பு கடற்கரைக்கு வந்திறங்கினர்.

பின்னர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர். பொலிஸார் இவர்களை மன்னார் மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

# சர்வதேச கண்காணிப்பாளர்கள் நேற்று கொழும்பு வருகை!

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்க - நூற்றுக்கும் மேற்பட்ட பார்வையாளர்களை மேலதிகமாக பவ்ரல் அமைப்பு வரவழைத்துள்ளதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பவ்ரல் அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் -

குறிப்பாக வாக்களிப்பு நாளன்று இவர்கள் கண்காணிப்புப் பணிகளில் பங்கேற்பர். கடந்த ஒக்ரோபர் 2 ஆம் நாள்முதல் கண்காணிப்பாளர்களாக பணியாற்றுவோருடன் இவர்கள் இணைந்துகொள்வர். இந்தக் குறுகியகாலக் கண்காணிப்பாளர்கள் ஐரோப்பா, அமெரிக்கா உள்ளிட்ட 35 நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்டுள்ளனர்.

சுதந்திரமான தேர்தலுக்கான ஆசிய அமைப்பு, வன்முறையற்ற அமைதிக்கான படை, கல்வியாளர்கள் சமூகம், மனித உரிமை அமைப்புகள் உள்ளிட்டவைகளின் பிரதிநிதிகளே கண்காணிப்பாளர்களாக நேற்று வருகை தந்துள்ளனர்.

இவர்களுக்கு 2 நாள் பயிலரங்கு நாளையும், நாளை மறுதினமும் நடைபெறும். இந்தப் பயிலரங்குகளில் ஜனாதிபதி வேட்பாளர்களின் பிரதிநிதிகள், கண்காணிப்பாளர் பணிகள் குறித்து விளக்கமளிப்பர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டக்ளஸ்...

வில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் மட்டக்களப்பைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுரேஷ்குமார், கந்தையா தாளையர் ஆகிய இரு இளைஞர்களைக் கைதுசெய்தனர்.

இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக நாரஹேன்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## ஜயந்த...

தெரிவுசெய்யவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பதவிக்கான வேட்பாளராக இலங்கை அரசின் சார்பில் ஜயந்த தனபால அறிவிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## மாணவர்...

தெரிவுசெய்யப்பட்ட மாணவர் பிரதிநிதிகளே கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, இந்த மாணவர் எழுச்சி மாநாட்டுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், சிறுவர் பாதுகாப்பு தொடர்பான அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடலட்டை...

உயிரிழந்தவராவார்.

நேற்றுக்காலை 6.30 மணியளவில் கடலில் கடலட்டை பிடித்துக் கொண்டிருந்தபோது கடலுக்குள் வெடிச் சத்தம் ஒன்று கேட்டதாகவும் இந்த அதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட மீனவரை சக மீனவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்தபோதும் - அங்கு சிகிச்சை பலனளிக்காத நிலையில் அவர் உயிரிழந்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் விசாரணையின் பின்னர் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## கொத்தணி...

சாவடிகளானது அரச கட்டுப்பாடற்ற பகுதியின் எல்லையில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட வேண்டும் என தேர்தல் ஆணையாளர் தமது யோசனையில் குறிப்பிட்டிருந்தார். இதனை நிராகரித்த உயர்நீதிமன்றம், குறித்த கொத்தணி வாக்குச் சாவடிகள் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் அமைக்கப்பட வேண்டும் என உத்தரவிட்டது.

வாக்களிக்க வரும் மக்களுக்கு இரண்டு கட்டங்களாகப் போக்குவரத்து வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. அத்துடன் வாக்காளர்களை அடையாளம் காண்பது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தைக் குறித்த வாக்குச் சாவடிகளின் பொறுப்பதிகாரிக்கு உயர்நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இந்த நிலையில் வழக்குத் தொடர்பான மேலதிக விசாரணைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி மீண்டும் நடைபெறும் என உயர்நீதிமன்றம் அறிவித்தது. (01)

## மாவீரர் நாளை முன்னிட்டு....

அகற்றுவதன் மூலம் அத்தகைய கழிவுகளின் பரவலான தேக்கத்தை தவிர்த்தல்.

சிரமதானம் செய்தல் - சம்பந்தப்பட்ட சகலரும் உட்பகுதிகளையும், சுற்றுப்புறப் பகுதிகளையும் அதனுடன் இணைந்த பகுதிகளையும் பாதையோரத்தை அண்டிய பகுதிகளில் காணப்படும் திண்மக் கழிவுகளை அகற்றி பற்றைகளை வெட்டித் தூய்மையாக்கல்.

பாதைகள், வாய்க்கால்கள், பொது இடங்கள் போன்றவற்றில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் பொதுமக்களை பயன்படுத்தி சிரமதானம் செய்தல்.

மரநடுகை - வீடுகள் வீதியோரங்கள் பொது இடங்கள் , சகல இடங்களுக்குமான மரநடுகையை மேற்கொள்ளல்.

ஏற்கனவே நடப்பட்டு பராமரிப்பின்றி இருக்கும் மரக்கன்றுகளை பராமரிப்பதுடன், தேவையான இடங்களில் மரங்களைப் பாதுகாக்க கூடிய ஒழுங்குகளைச் செய்தல். என்பவற்றைச் இந்தச் சூழல் வாரத்தில் கடைப்பிடிக்குமாறு தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்கள், அரச திணைக்களங்கள், பாடசாலைகள், விவசாய வர்த்தக அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள், சுகாதார திணைக்களங்களைச் சேர்ந்த மக்கள் அனைவரையும் இந்தச் சூழல் வாரத்தில் இணைந்து செயற்படுமாறு தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையம் அழைப்பு விடுத்துள்ளது.

## கடற்படை, விமானப்படை.....

தகவல் புலிகளுக்கு கிடைத்ததாக அரசு கூறுகிறது. ஆனால் மட்டக்களப்பில் கப்டன் நிலாம் பதவியிலிருந்த போதே அவரை புலிகளுக்கு நன்கு இனங்காணக்கூடியதாகஇருந்தது.

ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதும் - பிரித்தானியாவைப்போன்று புலனாய்வுக் கட்டமைப்பு மாற்றியமைக்கப்படும்.

அதுமட்டுமன்றி ஆயுதக்கொள்வனவு நடைமுறைகளையும் பிரித்தானியாவில் உள்ளதைப்போன்று நவீனமயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

குறிப்பாக கடற்படை, மற்றும் விமானப்படையை- எந்தச் சவாலையும் எதிர்கொள்ளும்வகையில் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

யுத்தத்திற்கு அப்பால் நவீன உலக மாற்றங்களுக்கேற்ப - எதிரிகளை முறியடிக்க இது அவசியசியமானதாகும். நாட்டின் இறைமையைப் பாதுகாக்க படைகளைப்பலப்படுத்துவது தவிர்க்கமுடியாததாகும்.

புலிகளோ ஜே.வி.பியினரோ ஒருவரையொருவர் எப்போதுமே தாக்கியது கிடையாது. இந்த நிலையில் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச இராணுவத்தைக் கலைக்கக் கோரியுள்ளார்.

இவர் புலிகளுக்கு ஆதரவாகவே இராணுவத்தைக் கலைக்குமாறு கோரினார். இது ஒரு உள்சதியா என்பதை கண்டறியவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை பெலியத்தவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க - ஜே.வி.பியினராலேயே எமது படையினர் உயிரிழக்கவேண்டி ஏற்பட்டது.

ஜே.வி.பியினர்தான் இந்தியப் படையை வெளியேற்ற காரணமாக இருந்தனர். அவ்வாறு வெளியேற்றி இருக்காவிடின் இந்தியப் படை புலிகளுக்கு எதிராகப் போராடிஇருக்கும். எமது படையினர் பாதுகாப்பாக இருந்திருப்பர்.

எனவே எமது படையினரின் அழிவுக்குக் காரணம் ஜே.வி.பியினர்தான். மஹிந்த ஜனாதிபதியானால் ஜே.வி.பியினர் ஆயுதம் தூக்குவார்கள் என்றும் ரணில் மேலும் தெரிவித்தார்.

aat Final விரிவுரைகள்,
(Paper Class) ஆரம்பம்
காலம் :- 12.11.2005 10.00A.M
Career. Com Institute,
No 167, 1 st Cross Road,
Jaffna.
(C/4821)




இப்பத்திரிகை இல.267, [illegible]லர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.11.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.